TB. 239

மஜ்ஜா பஜ்ஜகம்

R6x3,1 N12

97132

785.

# மநீஷாபஞ்சகம்

இவை

ஸ்ரீ ஜகத்குரு

ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் அருளிய

ஸம்ஸ்கிருத சுலோகங்களும்,

பதஞ்சலி முனிவர் இயற்றிய

வியாக்கியானத்தை அநுசரித்து,

"ஆரியா" பத்திராதிபராயிருந்த

திருவையாறு,

ஸ்ரீமத்

அ. ஸ்வாமிநாத ஐயரவர்கள்

எழுதிய

தமிழ்ப் பதவுரை, பொழிப்புரை, கருத்துரைகளும்

அடங்கியது

செந்தமிழ்ப் பிரசுரம் ௧௨

மதுரை

தமிழ்ச்சங்க முத்திராசாலைப் பதிப்பு.

1912 [விலை அணா 8

காபிரைட் ரெஜிஸ்டர்ட்]

செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட

மாதம் 1985 வருடம்

செப்பனிட்டு முடித்த

மாதம் 1986 வருடம்

ஆராய்ச்சி உதவியாளரின் கையொப்பம்.

97132

உ

# மநீஷாபஞ்சகம்

இது

ஸ்ரீ ஜகத்குரு

ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் அருளிய

ஸம்ஸ்கிருத சுலோகங்களும்,

பதஞ்சலி முனிவர் இயற்றிய

வியாக்கியானத்தை அனுசரித்து,

"ஆரியா" பத்திராதிபராயிருந்த

திருவையாறு,

ஸ்ரீமத்

அ. ஸ்வாமிநாத ஐயரவர்கள்

எழுதிய

தமிழ்ப்பதவுரை, பொழிப்புரை, கருத்துரைகளும்

அடங்கியது

செந்தமிழ்ப் பிரசுரம் கூஉ

மதுரை:

தமிழ்ச்சங்க முத்திராசாலைப்

பதிப்பு.

1912

காபிரைட் ரெஜிஸ்டர்டு]

OFFICE OF ... 11 DEC 1912 MADRAS

# முன்னுரை

ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் அருளிய சிறு நூல்களென்னும் பெரிய விஷயங்களடங்கிய கிரந்தங்களைத் தமிழுரையுடன் விரிவாக எடுத்தெழுதி ஒவ்வொன்றாக வெளியிடக் கருதி முதன் முதலில் "மோகமுத்கரம்" என்னும் நூல் வெளியிடப்பட்டது. அந்த வரிசையில் இரண்டாவது புத்தகமாக இப்பொழுது "மநீஷாபஞ்சகம்" வெளியிடப்படுகிறது.

"அகஸ்தியாசிரமம்"
சென்னை.
10 நவம்பர் 1912.

தி. அ. ஸ்வாமிநாத ஐயர்

உ

# மநீஷா பஞ்சகம்

வியாக்கியான கர்த்தரான பதஞ்சலி முனிவர் கூறிய மங்களம்

𑌸𑌦𑌾𑌕𑌾𑌶 𑌚𑌿𑌦𑌾𑌨𑌨𑍍𑌦 𑌸𑌦𑍈𑌕𑌰𑌸𑌰𑍂𑌪𑌿𑌣𑍇
𑌨𑌿𑌤𑍍𑌯𑌶𑍁𑌦𑍍𑌧 𑌨𑌿𑌰𑌾𑌭𑌾𑌸 𑌕𑍂𑌟𑌸𑍍𑌥𑌾𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑍇 𑌨𑌮𑌃 ॥

ஸதாகாச சிதாநந்த ஸநேக ரஸநுபிணே
நித்யசுத்த நிராபாஸ கூடஸ்தா யாத்மநேநம:

ஸத்ரூபமாகவும், எங்கும் வியாபித்ததாகவும் ஞானஸ்வரூபமாகவும், ஸாக்ஷீரூபமாகவும், எப்பொழுதும் அகண்டாகாரமாகவும், நாசமில்லாததாகவும், சுத்தமானதாகவும், பிரமையில்லாததாகவும், விகாரமில்லாததாகவும் இருக்கிற பரமாத்மாவுக்கு நமஸ்காரம்.

𑌆𑌨𑌨𑍍𑌦𑌘𑌨𑌮𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌂 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌕𑌾𑌰𑌂 𑌨𑌿𑌰𑌞𑍍𑌜𑌨𑌂 ।
𑌭𑌜𑍇𑌽𑌹𑌂 𑌭𑌗𑌵𑌤𑍍𑌪𑌾𑌦𑌂 𑌭𑌜𑌤𑌾𑌮𑌭𑌯𑌪𑍍𑌰𑌦𑌂 ॥

ஆனந்தகன மத்வந்த்வம் நிர்விகாரம் நிரஞ்சனம்
பஜேஹம் பகவத்பாதம் பஜதா மபயப்ரதம்

சுகத்தினால் நிரம்பியதும், சுகம் துக்கம், நன்மை தீமை, குளிர் வெப்பம் முதலிய இரட்டைகளற்றதும் (சீதோஷ்ணம் முதலிய தொந்தங்களற்றதும்), விகாரமற்றதும், ஸேவிப்பவர்களுக்கு அபயம் அளிப்பதுமான பகவானது திருவடிகளை யான் ஸேவிக்கின்றேன்.

## பீடிகை

ஆறுவகை யற்புதக்குணங்களுடன்கூடிக் கருணையங்கடலாகி விளங்கும் பரமசிவனார் இவ்வுலகில் துக்கங்களென்னும் நீர்ப்பிராணிகளுக்கு இருப்பிடமான சமுசாரமென்னும் சமுத்திரத்தில் மூழ்கின ஆன்மகோடிகளை யுய்விக்க விருப்பமுற்றவராகிச் சண்டாள

(புலைய) வேடம் பூண்டு, ஒரு தருணத்திற் காசிபட்டணத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளுக்குச் சமீபத்தில் வந்தார். அப்பொழுது அந்தச் சண்டாளவேஷதாரியான சிவபிரானைப் பார்த்து 'அப்புறம் விலகு' என்று ஸ்ரீ சங்கராசாரியர் சொல்லவே, அவரோடு அந்தச் சண்டாள் வேஷம்பூண்ட ஈசுரர் பின்வருமாறு உரையாடலுற்றூர்:—

𑌅𑌨𑍍𑌨𑌮𑌯𑌾𑌦𑌨𑍍𑌨𑌮𑌯𑌮𑌥𑌵𑌾 𑌚𑍈𑌤𑌨𑍍𑌯𑌮𑍇𑌵 𑌚𑍈𑌤𑌨𑍍𑌯𑌾𑌤𑍍 ।
𑌯𑌤𑌿𑌵𑌰 𑌦𑍂𑌰𑍀𑌕𑌰𑍍𑌤𑍁𑌂 𑌵𑌾𑌂𑌛𑌸𑌿 𑌕𑌿𑌂 𑌬𑍍𑌰𑍂𑌹𑌿 𑌗𑌚𑍍𑌛 𑌗𑌚𑍍𑌛𑍇𑌤𑌿 ॥

அன்னமயா தன்னமய மதவா சைதன்யமேவ சைதன்யாத்
யதிவர தூரீகர்த்தும் வாஞ்சஸி கிம்ப்ரூஹி கச்சகச்சேதி

யதிவர=ஓ முனிச்சிரேட்டரே!

(அத்ர) ப்ரூஹி=(இவ்வினவிற்கேற்ற) விடைதொடும்:—

அன்னமயாத் } = அன்னத்தின் விகாரமான உமது சரீரத்தினின்று, அன்னத்தின் விகாரமான எனது
அன்னமயம் } சரீரத்தை

கச்ச கச்ச இதி=போ போவென்று

தூரீகர்த்தும்=அப்புறப்படுத்துவதற்கு

வாஞ்சஸி கிம்=விரும்புகின்றீரா, என்ன

அதவா=அன்றேல்

சைதன்யாத்=சேதன (சத்தி) ஸ்வரூபமான உமது பிரத்யகாத்மாவினின்று

சைதன்யமேவ=சேதனஸ்வரூபமாகி எனது சரீரத்து உள்ளுறையும் பிரத்யகாத்மாவை (போ போ வென்று அப்புறப்படுத்த விரும்புகின்றீரா ?)

என்று சண்டாளன் கேட்டான். இதன் உத்தேசம் உண்மையான சித்தாந்தத்தை வெளியாக்கவேண்டுமென்பதேயாம். இங்குச்

சண்டாளன் ஸ்ரீசங்கராசாரியரது மறுமொழியை யூகித்து அதனைக் கண்டிக்கிறான். எங்ஙனமெனின், முதற்கேள்வியை ஒப்புக்கொள்வீராயின், அது யுக்தமாகாது (சரியன்று); உமது சரீரம் எவ்வாறு அன்னத்தின் விகாரத்தினால் அமைந்துள்ளதோ அவ்வாறே எனது சரீரமும் அன்னத்தின் விகாரத்தினாலாயதாதலின் என்க. இரண்டு சரீரங்களும் ஒரேவிதமானவையினால், உமது சரீரம் சுத்தம் என்றால், எனது சரீரம் அசுத்தமானதா? இரண்டும் சுசி (சுத்தம)ானவையென்று ஒப்புக்கொள்வீராயின், அப்புறம் அகல் என்று ஓட்டுவது எங்ஙனம்? எனது சரீரம் அசுத்தமானதென்பீரேல், உமது சரீரமும் அசுத்தமானதேயன்றோ? ஆகையால் சரீரத்தைப்பற்றி அப்புறம்போவென்று கூறுவது தகாது. நம் இருவரது சரீரங்களும் அசுத்தமானவையென்று உரைப்பதற்கு வேதமே பிரமாணமாக இருக்கின்றது:—

“சரீரஸ்யான்னகார்யத்வம்”=சரீரங்களனைத்தும் அன்னத்தின் விகாரங்களேயாம்.

“ஸவா ஏஷ புருஷோன்னரஸமய:” = புருஷனெனப்படும் இந்தத் தேகமுதலியவைகளின் தொகுதி அன்னரஸத்தின் விகாரமாகும்.

இவ்வுலகம் முழுவதும் மாயாவிகாரமானதனால் ஒரேவிதமானதென்று தெரிந்துகொள்ளல்வேண்டும். அஃதாவது, உலகமெல்லாம் மாயையின் காரியமானமையால் ஒரேவிதமான சரீரத்தைப் பற்றி அபிமானம் பாராட்டுதல் தகாது என்பது கருத்து.

இனி, இரண்டாங்கேள்வியை ஒப்புக்கொள்ளுவதும் தகாதென்று காட்டுகின்றான்:—சைதன்யவடிவமாக விளங்கும் பிரத்யகாத்மஸ்வரூபமானது உமது சரீரத்திலும் எனது சரீரத்திலும் ஏனைய எறும்பு முதலாகவுள்ள சரீரங்களிலும் ஒரேவிதமாக இருக்கின்றமையின், இந்தப் பக்ஷமாகக்கொண்டாலும் ‘அகன்று செல்’ என வெருட்டுதற்கு இடனில்லை. இதற்கு வேதப்பிரமாணம்:—

𑌏𑌕𑍋 𑌦𑍇𑌵𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌗𑍂𑌢𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌵𑍍𑌯𑌾𑌪𑍀 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾 ॥

ஏகோதேவ: ஸர்வபூதேஷு கூட:
ஸர்வவ்யாபீ ஸர்வபூதாந்தராத்மா

"ஒருவராகவும், பிரகாசமான ரூபமுடையவராகவும், எல்லாப்பூதங்களிலும் இரகசியமாகப்பொதிந்திருந்து எங்கும் பரவினவராகவுமிருப்பவர் எல்லாப் பூதங்களுக்குஞ் சாக்ஷியான பிரத்தியகாத்மாவாவர். அவர் குணரஹிதமானவர்."

ஒருவராகவும் எங்கும் நிறைந்தவராகவும் இருக்கின்ற பிரத்தியகாத்மா ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அகன்று செல்வது அமையாது. செயலற்ற வஸ்துவினுக்குச் செய்கை உண்டென்பது ஏற்குமோ? இவைகளையெல்லாம் ஆலோசித்துச் சொல்லுகின்றான்:—

𑌪𑌰𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌨 𑌪𑍍𑌰𑌶𑌂𑌸𑍇𑌨𑍍𑌨 𑌗𑌰𑍍𑌹𑌯𑍇𑌤𑍍 ।
𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑍇𑌕𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍍𑌯𑌾 𑌪𑍁𑌰𑍁𑌷𑍇𑌣 𑌚 ॥

பரஸ்வபாவ கர்மாணி நப்ரசம்ஸேந் நகர்ஹயேத்
விசுவமேகாத்மகம் பசியன் பிரகிருத்யா புருஷேணச

"பிரகிருதியின் சம்பந்தத்தினாலும், பிரத்தியகாத்மரூபத்தினாலும் உலகம் ஒரே விதமாக இருக்கின்றதெனப் பார்க்கிறவன் அன்னியர்களுடைய ஸ்வபாவங்களைப்பற்றியாவது அவர்களது காரியங்களைப்பற்றியாவது துதிக்கவும் கூடாது; நிந்திக்கவும் கூடாது."

𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑍍𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑌿 𑌨𑌿𑌸𑍍𑌤𑌰𑌙𑍍𑌗𑌸𑌹𑌜𑌾𑌨𑌨𑍍𑌦𑌾𑌵𑌬𑍋𑌧𑌾𑌮𑍍𑌬𑍁𑌧𑍌
𑌵𑌿𑌪𑍍𑌰𑍋𑌯𑌂 𑌶𑍍𑌵𑌪𑌚𑍋𑌯𑌮𑌿𑌤𑍍𑌯𑌪𑌿 𑌮𑌹𑌾𑌨𑍍 𑌕𑍋𑌯𑌂 𑌵𑌿𑌭𑍇𑌦𑌭𑍍𑌰𑌮𑌃
𑌕𑌿𑌂 𑌗𑌙𑍍𑌗𑌾𑌮𑍍𑌬𑍁𑌨𑌿 𑌬𑌿𑌮𑍍𑌬𑌿𑌤𑍇𑌮𑍍𑌬𑌰𑌮𑌣𑍌 𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑌵𑍀𑌥𑍀𑌪𑌯𑌃𑌪𑍂
𑌰𑍇 𑌵𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑌸𑍍𑌤𑌿 𑌕𑌾𑌞𑍍𑌚𑌨𑌘𑌟𑍀𑌮𑍃𑌤𑍍𑌕𑍁𑌮𑍍𑌭𑌯𑍋𑌰𑍍𑌵𑌾𑌮𑍍𑌬𑌰𑍇 ॥

ப்ரத்யக்வஸ்துநி நிஸ்தரங்க ஸஹஜானந்தாவபோதாம்புதௌ
விப்ரோயம் சுவபசோயமித்யபிமஹான் கோயம்விபேதப்ரம:
கிம் கங்காம்புநி பிம்பிதேம்பரமணௌ சண்டாளவீதீபய:பூரே
வாந்தரமஸ்தி காஞ்சனகடீ ம்ருத்தும்பயோர்வாம்பரே

பிரத்யக்வஸ்துனி=பிரத்தியகாத்மாவினிடத்து

நிஸ்தரங்க:=விகற்பமற்ற

ஸஹஜ:=ஸ்திரமான

ஆனந்த=மேன்மையான சுகரூபங்கொண்ட

அவபோத=ஞானமெனும்

அம்புதௌ=சமுத்திரத்தில்

அயம்விப்ர:=இவன் பிராமணன்

அயம்சுவபச:=இவன் நாயைத்தின்பவன் (சண்டாளன்)

இதிஅபி=என்னும்

மஹாந்=பெரியதான

அயம்[illegible]தப்ரம:=இந்த பேதபுத்தி (வேற்றுமையுணர்ச்சி)

க:=[illegible]து?

கங்காம்புனி=கங்காஜலத்தில்

பிம்பிதே=பிரதிபலித்த

அம்பரமணௌ=சூரியனுக்கும்

சண்டாளவீதிபய:பூரேவா=சண்டாளரது வீதியிலுள்ள ஜலத்தில் பிரதிபலித்த (சூரியனுக்கும்)

கிம் அந்தரம் அஸ்தி=என்னபேதமிருக்கின்றது?

காஞ்சனகட ம்ருத்கும்பயோ:=பொற்குடத்திலும் மட்குடத்திலும் இருக்கிற

அம்பரே (பி)=ஆகாசத்திலாவது

(கிம் அந்தரம் அஸ்தி)=(என்னபேதம் இருக்கின்றது?)

அந்ருதம் (பொய்), ஜடம் (ஜீவனற்றது), துக்கம் (துன்பம்) ஆகிய இவ்வடிவங்கள்கொண்ட அஹங்காரம் முதலியவைகளை விட வேறானதாகப் பிரகாசிக்கும் வஸ்துவே பிரத்தியகாத்மா எனப்படும். இதனால் பிரம்மம் ஸத்ரூபமானதென்று ஏற்பட்டது. பிரம்ம சைதன்னியம் ஸத்ரூபமானதெனின், அதனிடத்து ஞானமும் ஆனந்தமுங் கூட அமைந்துளவென்று சொன்னதுபோலாம். பிரம்மம் என்பது ஸத்தியம், ஞானம், ஆனந்தம் என்னும் மூன்று தன்மைகளமைந்ததென்பது வேதங்களினால் நாம் அறிந்துகொண்ட விஷயமன்றே. இம் மூன்றனுள் முதலாவதான ஸத்யமென்னும் லக்ஷணத்தை 'பிரத்யக்வஸ்து' எனுஞ் சொல்லினாற் குறித்தமையின், பிரம்மத்திற்குரிய ஏனைய இரண்டு தன்மைகளான ஞானம், ஆனந்தம் என்பனவற்றைக் கூடக் குறிப்பிட்டதுபோலாயிற்று. இது மேற்கண்ட சுலோகத்தில் பிரத்தியகாத்மாவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அடைமொழிகளினால் விளங்கும். அது விகாரமற்றது, நிலையானது, உயர்ந்த சுகரூபமானது, ஞானமெனும் சமுத்திரம் என்று வர்ணிக்கப்பட்டிருக்கின்றது; சமுத்திரம் எங்கும் ஒரே ஸ்வரூபமானதாதலின் அந்த பரப்பிரம்ம வஸ்துவுக்கு ஸச்சிதானந்தம் (ஸத், சித், ஆனந்தம்) எனும் ஸ்வரூபலக்ஷணம் மேற்படி அடைமொழிகளினால் ஏற்பட்டது. ஸத்=விகாரமற்று, எப்பொழுதும் நிலையாயுள்ளது; சித் - ஞானம்; ஆனந்தம் - சுகம்.

'பிரத்தியகாத்மா' என்றால் பிரத்தியேகமான, வேறான ஆத்மா என்று அர்த்தமாம். சாசுவதமில்லாதனவாகவும், பிரகிருதிசம்பந்தமானவைகளாகவும், துக்கத்திற்குக் காரணமானவைகளாகவும் இருக்கிற அஹங்காரம் முதலியவைகளுக்குப் பிறிதாகவும், அவைகளுக்கு எட்டாததாகவும் அஃது இருக்கின்றமையின் 'வேறானது' என்று சொல்லப்பட்டது. மேற்கண்ட சுலோகத்தில் அதனைக் குறிக்குமிடத்து 'வஸ்து' எனும் பதம் உபயோகப்பட்டிருக்கின்றது. 'வஸ்து' என்றதனால் இருக்கப்பட்டதென்று அர்த்தமாகும்; மற்றவைகளெல்லாம் உண்மையில் இல்லாதிருக்க, இஃதொன்றே இருக்கின்றது என்பதாகும். இங்ஙனம் உண்மையாக இருக்கும் தன்மை பரப்பிரம்மத்திற்கு மாத்திரமே யுரியது; அஃதொன்றே உண்மையான 'இருப்பு.' இந்த 'இருப்பு,' அல்லது, 'ஸத்' என்

பது பரப்பிரம்மத்திற்குரிய மூன்று லக்ஷணங்களுள் ஒன்றாகும். பிரத்தியகாத்மாவானது பிரம்மமேயென்று ஸ்தாபிக்கவேண்டின், ஸத் சித் ஆனந்தமெனும் மூன்று லக்ஷணங்களும் அதனிடத்து இருப்பதாகக் காட்டவேண்டும். அவற்றுள் முதலாவதான 'இருக்குந்தன்மை' (ஸத்) என்பது 'வஸ்து' என்னும் பதத்தினால் அதற்கு ஏற்பட்டிருக்கின்றது. அது 'சித்' ( ஞானம் ) ஆகவும் இருக்கின்றது. அஃது எங்கும் வியாபித்திருப்பதனாலும் ஸ்வப்பிரகாசமாக இருப்பதனாலும் ஏற்பட்டதாயிற்று. இந்தத் தன்மைகள் அதனிடத்துளவென்பது ஷெ சுலோகத்தில் "அவபோத அம்புதௌ" (ஞானமெனும் சமுத்திரத்தில்) என்ற அடைமொழியினால் விளங்கிற்று. அன்றியும், இந்த ஞானமானது "ஸஹஜ: ஆனந்த" (ஸ்திரமான, மேன்மையான சுரூபங்கொண்ட) என்னும் அடைமொழிகளை ஏற்றதனால், பிரத்தியகாத்மாவுக்கு 'ஆனந்த' த்தன்மையும் சொல்லலாயிற்று. ஆகவே இந்தச் சுலோகத்தின் கருத்து பிரத்தியகாத்மாவுக்கு ஸத் சித் ஆனந்த லக்ஷணங்கள் உள, அது பரமாத்மாவேயன்றி வேறன்று என்பதாம்.

ஸத், சித், ஆனந்தமெனும் இவ் அடைமொழிகளைக் கவனிக்குமிடத்து, இம் மூன்றிற்கும் உண்மையாக வித்தியாசமே இல்லை. ஆதலின், அவற்றுள் ஒன்றைக் குறித்தால் மற்ற இரண்டையுங் குறித்ததுபோலவேயாம். ஆனால் அவை வேற்றுமையுள்ளவைகளைப்போலக் காணப்படுவது உபாதி (சரீரம்)யினாலென்க. ஆழ்ந்துபார்க்கின், அவற்றிற்கு வித்தியாசத்தன்மையே கிடையாது; தோற்றப்படுகின்ற வித்தியாசம் நமது பிரமையினாலுண்டானதாகும். பிரமையினால், அல்லது மனத்தினால், நாமாக மேற்கொண்டது உண்மையாகுமோ? அது நிலையாக இராது; ஆதலின், அஃது இருப்பதாகக் கணக்கிலெடுத்துக்கொள்ளக்கூடாது. அங்ஙனமல்லாது, மேற்கூறிய மூன்று தன்மைகளுக்கும் வித்தியாசம் உளதென்றுகூறக்கின், ஸத், சித், ஆனந்தமெனுமவை தனித்தனியே ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் இருக்கக்கூடியவைகளாகவேண்டும். அப்படித் தனித்தனியாக இருப்பது அமையாது. என்னையெனின், சித்தும் (ஞானம்) ஆனந்தமும் மாத்திரமிருக்கின்றனவென்றும் ஸத் (ஸத்தியம்) என்பது இல்லையென்றும் கொள்வோம்.

அப்பொழுது ஞானத்திற்கும் ஆனந்தத்திற்கும் மறுபிறப்புக் கள் இருக்கவேண்டும்; அவை அடிக்கடி பிறந்திறக்கவேண்டும். அஃதாவது, சித், ஆனந்தம் எனும் இரண்டு லக்ஷணங்களை மாத் திரமுடைய வஸ்து ஒரே நிலையான சாசுவதவாழ்க்கையுடையதா காது; ஏனெனில், அதனில் ஸத் (ஸத்தியம் எனும் தன்மை) இல்லை; ஸத்தியமெனுந்தன்மையாவது பூத, பவிஷ்யத்வர்த்தமா னம் (இறந்தகாலம், எதிர்காலம், நிகழ்காலம்) எனும் மூன்று கா லங்களிலும் இடைவிடாது சலனமற்று இருக்குந்தன்மையாம். ஆகையால், ஸத் இல்லாமல் மற்ற இரண்டு தன்மைகள் மாத்திரம் வாய்ந்த வஸ்து அடிக்கடி பிறக்கவேண்டியதேயாம். இப்படி அடிக் கடி பிறக்கும் வஸ்து, ஒருபொழுது இருந்து ஒருபொழுது இல் லாத வஸ்து, பரப்பிரம்மமாகாதென்று நாம் சொல்லவும் வேண்டு மோ? ஆகையால், அந்த மூன்று லக்ஷணங்களுள் ஒன்றாகிய ஸத் என்பது இல்லாவிடின் பரப்பிரம்மத்தின் தன்மைக்கே குறைவு வருகின்றது; விபரீதமான அர்த்தத்திற்கு இடங்கொடுக்கின்றது. இது நிற்க;

'சித்' என்பது தவிர மற்ற இரண்டு தன்மைகளும் மாத்திரம் இருக்கின்றனவென்று கொள்வோம். சித்தாவது ஞானம், அறிவு, பிரகாசமாகும். சித் இல்லையெனின், அறிவு இல்லை; பிரகாசமில் லையென்பதாயிற்று. ஆகவின், சித் இல்லாத பரமாத்மாவாவது ஞா னம், பிரகாசம், பிரக்ஞை இல்லாததாகின்றது; அதற்கு ஸ்வப் பிரகாச சக்தியில்லையென்றும், மற்றொன்றினால் அது பிரகாசிக்கிற தென்றும் அர்த்தமாகும். இது விரோதமான அர்த்தம்; பரமாத் மாவென்னும் பதத்திற்கே ஸ்வப்பிரகாசம் என்று பொருள். இத் தகைய காரணங்களினால் சித் இல்லாத பரமாத்மா உளதென்றுகொ ள்வது அமையாது. அன்றியும், வெளியுலகில் நாம் பார்க்கும் வஸ் துக்கள் பலவுருவங்கள் கொண்டன. இவ்வுருவங்கள் அடிக்கடி மா றுவதனால் அவை புதிது புதிதாகப்பிறக்கின்றனவென்று நம் மனத் திற்குத் தோற்றுகின்றது. உருவங்கள் இவ்வாறு மாறிக்கொண் டிருப்பினும் சிறிதும் அசையாமல், மாறாமல் அமைந்திருப்பது சித், அல்லது பிரஞ்ஞையேயாம். இந்தச் சித் இல்லாவிடின், நாம் காணும் உருவங்களனைத்தும் உண்மையாகவே அத்தனை வேறு

வேறான வஸ்துக்களென்றும் இடைவிடாது எக்காலத்தும் அழியா திருப்பது எதுவுமிலதென்றும் ஆகும். அஃதாவது, ஸத் இல்லை யென்பதாம். ஆனால் நாம் கொண்ட கொள்கையின்படி ஸத்தும் ஆனந்தமு மிருப்பதாகவும் சித்துமாத்திரம் இல்லாததாகவும் வைத்தோம். அந்தக் கொள்கைக்கே விரோதம் ஏற்பட்டது. எனவே, சித்து இல்லாமல் ஸத்தும் ஆனந்தமும் மாத்திரம் இருப்பது அமையாதென்பதாம்.

சாக்ஷியாகிய பரப்பிரம்மம் ஞானவடிவாக இருக்கிறது; ஆத லின், அனைவருக்கும் மிகுந்த பிரியமானதாகவும் ஆறுதலாகவு மிருக்கின்றது. அது ஸுகஸ்வரூபமானது எனபதற்குக் கேட்பா னேன்? ஆகவே, ஆனந்தம் என்னும் அடைமொழி அதற்கு ஏற்ற தென்பதற்கு ஐயமில்லை.

மேற்கூறிய காரணங்களினால், ஸத், சித், ஆனந்தம் என்னும் மூன்றுக்கும் இருப்பதாகத்தோற்றுகிற வித்தியாசமானது நாமகா ர்த்தமேயாம்; அஃது அந்தந்தத் தொழில் அல்லது உருவத்திற் குரிய வித்தியாசமாகும். பரப்பிரம்மத்தின் ஒவ்வோர் அமிசத்தை ச்சொல்லும் இடத்து ஒவ்வொரு லக்ஷணத்தைக் குறிக்கின்றோம். இப்படிப்பட்ட வித்தியாசத்தை வேதம் ஒப்புக்கொள்வதில்லை. சுருதி சொல்லுகின்றது:—

ஸத்யஂ ஜ்ஞாநமநந்தஂ ப்ரஹ்ம, ஆநந்தோ ப்ரஹ்ம ॥

ஸத்தியம் ஞானமனந்தம்பிரஹ்ம, ஆநந்தோப்ரஹ்ம

“பிரம்மமென்பது எங்கும் நிறைந்த சக்தி. அது சத்தியஸ்வ ரூபமானது, ஞானஸ்வரூபமானது, காலத்திற்கும் தேசத்திற்கும் உட்படாதது; ஆனந்தமே (சுகமே) பரப்பிரம்மமெனப்படும்.”

பரப்பிரம்மத்திற்குச் சரீரமில்லை; அஃது ஒருபொழுதும் மா றாதது, எங்கும் வியாபித்திருப்பது, வகுக்கக்கூடாதது என்று கண் டபின்னர், அதற்கப்பால் பிறிதொரு வஸ்து இலதென்றும், அதனை விட இரண்டாவது இல்லையென்றும் சொல்லவேண்டுமோ? அப்படி ப்பட்ட பரப்பிரம்மத்தினிடத்து, பிராமணன் (உயர்குலத்தவன்), சண்டாளன் (இழிபிறப்பினன்), நல்லது, கெட்டது, நடுத்தரமா னது என்பன ஆதிய வித்தியாசங்களைக் கற்பித்தல் ஏற்குமோ?

எங்கும் நிறைந்து ஒன்றாக இருக்கும் பரப்பிரம்மத்தினிடத்து உயர்வு, தாழ்வு முதலிய படித்தரங்கள் கிடையாவாம்.

“ஏகமேவாத்விதீயம்” என்று சுருதி கோஷிக்கின்றது. அஃதாவது, “பரப்பிரம்மம் ஒன்றுமாத்திரமே யுளது, இரண்டாவது இல்லை” என்பதாம். “ஒன்று” என்னும் அடைமொழியினால் அதே ஜாதியில் மற்றொன்று மில்லையென்று குறிக்கப்பட்டது. பலவகை மரங்களுள் இருப்பதைப்போன்ற வித்தியாசம் இல்லை, அவையனைத்தும் “மரம்” எனும் ஒரே வகுப்பைச்சேர்ந்தனவெனினும் அவற்றுள் பரஸ்பர வித்தியாசம் உண்டு. இதுவே “ஸஜாதீய” வித்தியாசம் எனப்படும்; அஃதாவது, ஒரே வகுப்பில் உள்ள வித்தியாசமாம். இத்தகைய வித்தியாசம் பரப்பிரம்மத்தினிடத்து இல்லையென்பதாம். அதனிடத்து “விஜாதீய” வித்தியாசமும் இல்லை. அஃதாவது, ஒரு ஜாதிக்கும் மற்றொரு ஜாதிக்கும் உள்ள வித்தியாசம்; உதாரணம், மரவகைக்கும் கல், மலை முதலியவற்றிற்கு முள்ள வேற்றுமையைக் காண்க. இவ்வபிப்பிராயமானது “(ஏவ) மாத்திரமே” என்று ஷை சுருதி சொல்வதனால் வெளியாகின்றது. மற்றொரு விதமான வித்தியாசமும் சாதாரணமாகச் சொல்வதுண்டு. அஃது ஒரே மரத்தின்கணுள்ள இலை, கிளை, புஷ்பம், காய் முதலியவற்றிற்குப் பரஸ்பரமாக உள்ள வேற்றுமையாகும். இது ‘ஸ்வகத’ பேதம் எனப்படும். அஃதாவது, தனக்குள் அல்லது தனது அங்கங்களுக்குள் இருக்கும் வித்தியாசமாம். இத்தகைய வித்தியாசமும் பரப்பிரம்மத்தினிடத்து இல்லை என்பது மேலே உதகரித்த சுருதியில் “(அத்விதீயம்) இரண்டாவதில்லை” என்றிருப்பதனால் வெளியாயிற்று. இவ்வாறாக, பரப்பிரம்மம் ஒன்றே யுளது. அஃது எங்கும் நிறைந்தது. அதனிடத்து எவ்விதமான வித்தியாசமும், ஸஜாதீய, விஜாதீய, ஸ்வகத பேதங்கள் இல்லை என்று உறுதியாகச் சொல்வதற்கு வேதப்பிரமாண முளது. இஃதன்றி, பின்வருவனபோன்ற சுருதிவாக்கியங்களு மிருக்கின்றன:—

𑌮𑍃𑌤𑍍𑌯𑍋𑌃 𑌸 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿॥
𑌯𑌦𑌾 𑌹𑍍𑌯𑍇𑌵𑍈𑌷 𑌏𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍁𑌦𑌰𑌮𑌨𑍍𑌤𑌰𑌂 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇।
𑌅𑌥 𑌤𑌸𑍍𑌯 𑌭𑌯𑌂 𑌭𑌵𑌤𑌿 ॥

ம்ருத்யோஸ் ஸம்ருத்யு மாப்நோதி
யதாஹ்யேவைஷ ஏதஸ்மிந் நுதர மந்தரம் குருதே
அத தஸ்ய பயம் பவதி

"ஆத்மவஸ்துவினிடத்து வித்தியாசங்காண்கின்றவன் மிருத்யு வடிவமான சமுசாரத்தினின்று ஒருபொழுதும் தப்பித்துக்கொள்ளாமற் சமுசாரத்தையே அடைகின்றான்;" "இந்தப் பிரம்மவஸ்துவினிடத்துச் சிறிதும் வித்தியாசஞ்செய்கிறவனுக்குப்பயம் உண்டாகின்றது."

இப்படிப்பட்ட சுருதிகள் அனேக மிருக்கின்றன. அவை பரப்பிரம்மத்தினிடத்துப் பேதம் பாராட்டுகிறவனை நிந்திக்கின்றன. இந்தக் காரணங்களினால், எங்கும் பரிபூரண ஸ்வரூபமாகவுள்ள பரப்பிரம்மத்தினிடத்துக் கொஞ்சமேனும் பேதத்திற்கு இடமே இல்லை.

தன்மை அல்லது குணம் வித்தியாசப்படுவதனால் சரீரங்கள் (உபாதிகள்) உயர்ந்தனவென்றும் தாழ்ந்தனவென்றும் வித்தியாசமாகக் காணப்படுகின்றன. இதனால் அந்தச் சரீரங்களில் அமைந்திருக்கும் ஆத்மா வித்தியாசப்படுகின்றதென்று சொல்வது சரியன்று; அது நியாயமாகாது; வித்தியாசம் சரீரங்களுக்கு (உபாதிகளுக்கு) உரியதேயன்றி உண்மையில் ஆத்மாவைச் சாராது. உதாரணமாக, கங்காநதியின் ஜலத்தில் பிரதிபலித்த சூரியனுக்கும் புலையரது வீதியிலுள்ள ஜலத்தில்பிரதிபலித்த சூரியனுக்கும் வித்தியாசமுண்டோ? உண்மையில் ஒரு வித்தியாசமு மில்லை. அப்படியிருக்க, ஜீவனுக்கும் (வியஷ்டி- தனித்தவடிவம்) ஈசுவரனுக்கும் (ஸமஷ்டி - பொதுவடிவம்) வித்தியாசம் எப்படி ஏற்பட்டது? இந்த வித்தியாசம் சரீரத்தினால் (உபாதியினால்) ஏற்பட்டது என்பதே அந்தக் கேள்விக்கு மொழியாம். இங்ஙனம் கூறுவதற்கு நமக்கு வேதப்பிரமாணம் உளது:—

𑌏𑌕𑌏𑌵𑌹𑌿 𑌭𑍂𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌭𑍂𑌤𑍇𑌭𑍂𑌤𑍇 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌃।
𑌏𑌕𑌧𑌾 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌚𑍈𑌵 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 𑌜𑌲𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑌤𑍍॥

ஏகஏவ்ஹி பூதாத்மா பூதேபூதே வ்யவஸ்தித:
ஏகதா பஹுதாசைவ த்ருச்யதே ஜலசந்த்ரவத்

அஃதாவது, "பூதங்களுக்கெல்லாம் ஆத்மாவான ஈசுவரன் ஒவ்வொரு பூதத்திலும் இருப்பவனாகி ஒருவிதமாகவும், பலவிதங்களாகவும், நீரிற்பிரதிபலிக்குஞ் சந்திரனைப்போல, காணப்படுகிறான்."

இன்னுமோர் உதாரணமும் எடுத்துக்காட்டுவோம்:— தங்கக் குடத்திலடங்கிய ஆகாசத்திற்கும் மட்குடத்திலடங்கிய ஆகாசத்திற்கும் என்ன வித்தியாச மிருக்கின்றது? உண்மையில் எங்கும் பரவியிருக்கும் ஒரே ஆகாசமானது பொற்குடத்திலும் மட்குடத்திலும் சம்பந்தப்பட்டு வேறுவேறாகப் பிரிக்கப் பட்டதாகக் காணப்படுவதுபோல, பாரமார்த்திகமாகவும் ஸத்து வடிவமாகவுமுள்ள பரமாத்மஸ்வரூபமானது பிரிவினை இல்லாத ஒன்றேயாக இருப்பினும் தேகம் இந்திரியங்கள் முதலியவற்றின் சம்பந்தத்தினால் அனேக விதங்களானதுபோலவும், தேசம் காலம் முதலிய உபாதிகளுள்ளது போலவும் காணப்படுகின்றது. ஆயினும் அஃது எப்பொழுதும் ஒன்றாகவே யிருந்து நிற்கின்றது. வேதமும் அங்ஙனமே கூறுகின்றது:—

𑌘𑌟𑌸𑌂𑌵𑍃𑌤 𑌮𑌾𑌕𑌾𑌶𑌂 𑌨𑍀𑌯𑌮𑌾𑌨𑍇 𑌘𑌟𑍇 𑌯𑌥𑌾 ।
𑌘𑌟𑍋 𑌨𑍀𑌯𑍇𑌤 𑌨𑌾𑌕𑌾𑌶𑌃 𑌤𑌦𑍍𑌵𑌜𑍍𑌜𑍀𑌵𑍋 𑌨𑌭𑍋𑌪𑌮𑌃॥
𑌆𑌕𑌾𑌶𑌵𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌗𑌤𑌶𑍍𑌚 𑌨𑌿𑌤𑍍𑌯𑌃॥

கடஸம்வ்ருத மாகாசம் நீயமானே கடேயதா
கடோ நீயேத நாகாசஃ தத்வஜ் ஜீவோ நபோபம:
ஆகாசவத் ஸர்வகதச்ச நித்யஃ

"குடத்தை ஒருவன் வேறு இடத்திற்குக் கொண்டுசெல்லின், அந்தக் குடம் கொண்டுபோகப்படுகின்றதேயல்லாது அதனிலடங்கிய ஆகாசம் கொண்டுபோகப்படுகிறதில்லை. அதுபோல, ஆகாசத்தைப்போன்ற ஜீவனும் கொண்டுபோகப்படமாட்டான்." (ஜீவன்) "ஆகாசத்தைப்போல எங்கும் நிறைந்திருப்பவன், நாசமில்லாதவன்" என்பது மேலே உதகரித்த சுருதிகளின் தாற்பரியமாகும்.

இக் காரணங்களினால், எங்கும் ஒரே ஸ்வரூபமாகவும், தனக்குத்தானே பிரகாசிப்பதாகவும், ஞானம் நிறைந்ததாகவும், எப்பொழுதும் ஆனந்தம் குடிகொண்டதாகவும், ஒன்றாகவுமிருக்கிற பரப்

பிரம்மத்தினிடத்திற் பேதம் கூறுவதற்கு இடமே இல்லாததனுல் வேறொருவரை அவமானப்படுத்துவது எப்படி அமையும்? எனவே, மற்றொருவரை நிந்திப்பதற்கு இடமில்லையென்பது சண்டாளவேஷந்தரித்த பரமேசுவரது அபிப்பிராயமாகும்.

அவதாரிகை

புலையவேடம் பூண்ட பரமசிவனுர் பகர்ந்த (மேற்கண்ட) மொழிகளைக்கேட்டு எல்லாமறிந்தவரும் பூஜிக்கத்தக்கவருமாகிய ஸ்ரீசங்கராசாரியஸ்வாமிகள் தம் அபிப்பிராயத்தை விளக்கலுற்றுர். ஆசாரியஸ்வாமிகள் எல்லாவிதமான சாதனங்களையுங்கொண்டு வேதாந்தசாஸ்திரத்தைக் கற்றுத்தேர்ந்து உண்மையான பிரம்மானுஸந்தானத்திலேயே எப்பொழுதும் அமர்ந்திருப்பவராதலின் சாந்தமான மனமுடையவர்; வர்ணம், ஆசிரமம் முதலிய அபிமானங்கள் அகன்றவர்; இவர் இந்நிலைமையை வெகுகால ஆராய்ச்சியினுலும் யோகாதி சாதனங்களினுலும் பெற்றவர்; சண்டாளவேஷதாரியான ஈசுவரர் தம்மைத் தர்க்கித்ததை நிமித்தமாகக்கொண்டு அவர் மேற்சொல்லிய சாதனங்களும் பயிற்சிகளும் ஸமாதியனுபவங்களுமில்லாத முமுக்ஷுக்களுக்குத் தாம் அடைந்துள்ள பரமசாந்தத்தைப் பின்வரும் ஐந்து சுலோகங்களினுற் போதிக்கலாயினர். பிராம்மணுதி வர்ணுச்ரமங்களிலுள்ள அபிமானத்தைப் போக்கடிப்பதும் உண்மை வடிவமான பிரம்மைக்கியத்தை யுணர்த்தி அவர்களைக் கடைத்தேறச்செய்வதுமே இவ்வைந்து சுலோகங்களின் கருத்தாகும். இந்தப் போதத்தை யுறுதிப்படுத்துமாறு ஸ்ரீ சுவாமிகள் தமது அனுபவத்தை இந்தச் சுலோகங்களில் உதகரித்து உரைக்கின்றுர். அன்றியும், விழிப்பு, கனவு, அருந்துயில் எனும் மூன்று அவத்தைகளுக்குஞ் சாக்ஷியாக விளங்கும் பிரத்தியகாத்மாவுக்கும் சுத்தசைதன்யத்திற்கும் உள்ள ஐக்கியத்தையும் விளக்குகின்றுர்.

ஜாக்ரத்ஸ்வப்நஸுஷுப்திஷு ஸ்புடதரா யா ஸம்விதுஜ்ஜ்ரும்பதே । யா ப்ரஹ்மாதி பிபீலிகாந்ததநுஷு ப்ரோதா ஜகத்ஸாக்ஷிணீ । ஸைவாஹம் ந ச த்ருஶ்யவஸ்த்விதி த்ருடப்ரஜ்ஞாபி யஸ்யாஸ்தி சேத் । சண்டாலோஸ்து ஸ து த்விஜோஸ்து குருரித்யேஷா மநீஷா மம ॥ க ॥

ஜாக்ரத் ஸ்வப்ந ஸுஷுப்திஷு ஸ்புடதரா யா ஸம்விதுஜ்ஜ்ரும்பதே
யா ப்ரஹ்மாதிபிபீலிகாந்ததனுஷு ப்ரோதா ஜகத்ஸாக்ஷிணீ
ஸைவாஹம் நச த்ருச்யவஸ்த்விதி த்ருடப்ரஜ்ஞா ஹி யஸ்யாஸ்தி சேத்
சண்டாளோஸ்து ஸது த்விஜோஸ்து குருரித்யேஷா மநீஷா மம

ஜாக்ரத் ஸ்வப்ந ஸுஷுப்திஷு = விழிப்பு, கனவு, அருந்துயில் எனும் மூவகை நிலைமைகளிலும்

யா ஸம்வித் = எந்த ஞானம்

ஸ்புடதரா = தெளிவாக

உஜ்ஜ்ரும்பதே = பிரகாசிக்கின்றதோ

யா = எந்த ஞானம்

ஜகத்ஸாக்ஷிணீ = உலகத்திற்கெல்லாம் சாக்ஷியாக இருக்கின்றதோ

ப்ரஹ்மாதிபிபீலிகாந்ததனுஷு = பிரமன் முதல் எறும்பீறாக உள்ள சரீரங்களில்

ப்ரோதா = அமைந்துளதோ

ஸ-ஏவ-அஹம் = அந்த ஞானஸ்வரூபி நானே

நச த்ருச்யவஸ்து = புலன்களுக்கு அகப்படக்கூடிய வஸ்துவாகேன்

இதி = இப்படி யென்னும்

த்ருடப்ரஜ்ஞா ஹி = திடமான ஞானம்

யஸ்ய = எவனுக்கு

அஸ்திசேத் = இருக்கின்றதோ

ஸது = அப்படிப்பட்டவன்

சண்டாளோஸ்து = சண்டாளனுனபோதிலும்

(அதவா)—(அல்லாது)

த்விஜோஸ்து—பிராமணனுனபோதிலும்

குரு ரிதி—குரு என்பது

மம—என்னுடைய

ஏஷாமனீஷா—அபிப்பிராயமாம்.

"விழிப்பு, கனவு, அருந்துயில் எனும் மூவகை நிலைமைகளிலும் எந்த ஞானம் தெளிவாகப் பிரகாசிக்கின்றதோ, எந்த ஞானம் ஜகத்து (உலகத்து) க்கெல்லாம் சாக்ஷியாக இருக்கின்றதோ, நான்முகப் பிரமன் முதல் எறும்பு ஈருகவுள்ள சரீரங்களில் எந்த ஞானம் அமைந்திருக்கின்றதோ, அந்த ஞானஸ்வரூபியே நான் ஆவேன். 'நான்' என்பது பார்வை முதலிய புலன்களுக்குத்தோற்றும் வஸ்துவன்று (நான் காணக்கூடிய வஸ்துவாகேன்). இப்படிப்பட்ட உறுதியான அறிவுள்ளவன் இழிகுலத்தவனுயினும் பிராமணனுயினும் அவனே குரு ஆவன். எனது அபிப்பிராயம் இதுவே."

ஸூரியன் முதலான அதிஷ்டான தேவதைகளினுல் அளிக்கப்பட்ட கண்கள் முதலான பத்துப்புலன்களினுல் சப்தம் முதலிய விஷயங்கள் எப்பொழுது அறியப்படுகின்றனவோ, அது ஜாக்கிராதாவஸ்தை (விழிப்பு நிலைமை) எனப்படும். கண்கள் முதலாகிய புலன்களுக்கு வியாபாரமில்லாமற்போய், அதனுல் மனத்தினுக்குக் காரியமில்லாமை அமையுங் காலம் ஸ்வப்னுவஸ்தை (கனவுநிலைமை) எனப்படும். அஃதாவது, தற்போது எதிரிற் பதார்த்தங்களில்லாதிருக்க, முன்னர்ப் பார்த்துள்ள பதார்த்தங்களின் ஞாபகத்தை மாத்திரம் மனம் மேற்கொண்டிருத்தலாம். அனைத்தினுக்குங் காரணமாகவும் அனுதி (ஆதியில்லாதது, முதலில்லாதது) யாகவுமுள்ள மூல அஞ்ஞானத்தில் மனம் லீனப்பட்டிருப்பதே (ஒன்றித்திருப்பதே) ஸுஷுப்தியவஸ்தை (அருந்துயில் நிலைமை) எனப்படும். இம் மூன்று நிலைமைகளுக்கும் சாக்ஷியாகப்பரமாத்மாவானவர் பிறப்பிறப்பில்லாதவராகி விளங்குகின்ருர். இம் மூன்று அவத்தைகளை

(நிலைமைகளை) யும் பிரகாசிக்கச் செய்வதனுல் அந்தப் பரமாத்மாவே அவைகளுக்கு ஆதாரமென்பது ஏற்படுகின்றது. அந்தப் பரமாத்மாவே நானென்று நினைக்கிறவன் பரமாத்மாவைப் போலத் தானுகவே பிரகாசிக்கின்ருன். "மூன்று அவத்தைகளுக்கும் சாக்ஷியாக நின்று அவைகளை விளக்கித் தனக்குத்தானே பிரகாசித்துக் கொண்டு சிதரூபமாக இருக்கும் பரப்பிரம்மம் நானுயினேன்" என்று எண்ணுகிறவன் அப்படியே ஆவான் என்பது பொருள்.

மூன்று அவத்தைகளையும் ஜீவன் பிரகாசிக்கச்செய்கின்ருன் என்று சொல்லும்போது, ஜீவனுக்குப் பிரம்மத்தின் தன்மை இருக்கிறதென்று குறிப்பிக்கப்பட்டது. அஃதாவது, பிரம்மத்திற்கு உரியதான பிரகாசிக்கச்செய்யுந்தன்மை ஜீவனுக்கும் இருக்கிறதென்பதாம். அன்றியும், தேகமும் இந்திரியங்களும் ஜீவனையடுத்து விளங்கி வர்த்திக்குஞ்சக்தி பெறுகின்றன என்னும்போது, மகாசைதன்னியத்தின் அப்படிப்பட்ட தனியான (வியஷ்டி) நிலைக்கு ஜீவன் எனப் பெயரென்றும், அதன் பொது (ஸமஷ்டி — தொகுப்பு) நிலைக்கே பிரம்மம் எனப் பெயரென்றும் அர்த்தமாகின்றது. இவ்வாருக ஜீவனும் பிரம்மமும் தன்மையில் ஒன்றே எனக் காட்டப்பட்டது.

மேற்சொல்லிய சுலோகத்தில் "(யாப்ரஹ்மாதி பிபீலிகாந்த தனுஷு ப்ரோதா) நான்முகப்பிரமன் முதல் எறும்பீருகவுள்ள சரீரங்களில் எந்த ஞானம் அமைந்திருக்கின்றதோ" என்று சொல்லப்பட்டது. ஞானவடிவமாக அங்ஙனம் அமைந்துள்ள பரமாத்மா தேகேந்திரியாதிகளை (தேகம், பொறிகள், புலன்கள் முதலியவைகளை) மாத்திரம் பிரகாசிக்கச்செய்பவரல்லர். மற்றென்னையெனின், ஜடப்பிரபஞ்சத்தையுங்கூடப் பிரகாசிக்கச்செய்கிருர் என்பது ஆசாரியஸ்வாமிகளது தாற்பரியமாம்.

"(ஜகத்ஸாக்ஷிணீ) எந்த ஞானம் ஜகத்து (உலகத்து)க்கெல்லாம் சாக்ஷியாக இருக்கின்றதோ" என்று சொல்லப்பட்டது. சாக்ஷாத்தாக (நேராக) ப்பார்க்கிறவன் சாக்ஷி எனப்படுவன் (ஸாக்ஷாத் ஈக்ஷித இதி ஸாக்ஷி). உலகமனைத்தினையும் பார்ப்பவர் பரமாத்மா என்பது கருத்து.

நன்று; அப்படிப்பட்ட ஆத்மா இருக்கும்பக்ஷத்தில் அவர் நமது கண்ணுக்கு ஏன் புலப்படார் எனின், அங்ஙனம் சொல்லக்கூடாது. என்னை யெனில், பரமாத்மாவானவர் சாக்ஷிரூபமாக விளங்குகின்றமையின் பிரத்தியக்ஷஸித்தமாகவே இருக்கிறார் என்பது தாற்பரியமாம். ஞானஸ்வரூபியான சாக்ஷியொருவர் இல்லாவிடில், உலகம் எவரால் விளங்கும் (பிரகாசிக்கச்செய்யப்படும்)? ஆகையால், எல்லாத் தேகங்களினிடத்தும் ஆத்மரூபமாக இருப்பவரும், உலகமனைத்தையும் விளங்குவிப்பவரும், ஞானமே வடிவமாகக்கொண்டவரும், சாக்ஷியாக இருப்பவருமான அந்தப் பரமாத்மா எவர் உளரோ, அவரே நானாயினேன். கண்ணுக்குப் புலப்படும் பிரபஞ்ச வஸ்து நானல்லன். தேகம் முதலானவைகளின் தன்மை சாசுவதமான (நிலையான) தன்று. நான் அவையெல்லாமாகேன். அகண்டாகாரமாக என்றைக்கும் நிலையாயுள்ள ஞானவடிவமே நான்! இந்த லக்ஷணங்களுள்ள நான் ஆத்மா. இவ்விதமாக உறுதியான ஞானம் (அறிவு) எவனுக்கு இருக்குமோ, அவன் குருவாவன் என்பது கருத்து. அந்தத் திடமான அறிவுடையவனே ஆசான்.

பிரஜ்ஞானத்தில் (அறிவில்) திடமாவது (உறுதியெனப்படுவது) யாது? அநேக ஜன்மங்களில் உறுதியாக மனத்தில் நினைப்பதனால் இந்த ஜன்மத்தில் மற்றொருவருடைய உபதேசமில்லாமலே காமம் குரோதம் லோபம் மோகம் முதலியவைகள் உண்டாகின்றன. அதுபோல, வெகுகாலம் விடாமற் செய்த நற்காரியங்களினால் பிரம்மதத்துவம் பாவிக்கப்பட்டுக் கடைசியிற் சாஸ்திரங்களைப்படிப்பது முதலான சாதனங்களில்லாமலே, எதிரிலிருக்கும் கடம் படம் (பானை, துணி) முதலியவைகளைப்போல, பிரம்மஸ்வரூபமானது அந்திசிக்கிரத்திற் பிரகாசிக்கின்றது. உலகத்துப்பண்டங்கள் நமது கண்ணுக்கு எளிதிற் புலப்படுவதுபோல, பூர்வஜன்மங்களில் நற்கருமங்கள் செய்து பரமனை நாடியுள்ள புண்ணியவான்களுக்குப் பிரம்மஸ்வரூபம் எளிதில் விளங்குகின்றது. இதுவே உறுதியான அறிவு (திடஞானம்) எனப்படும். இத்தகைய உண்மையான ஞானம் எவனுக்கு இருக்கின்றதோ அந்தப் பிரம்மநிஷ்டன் பிரம்மஸ்வரூபியே என்று நாம் அறியக்கடவோம். அவன் புலையனாயி

னும் அவனே காரணகுரு என்பதுவே தமது அபிப்பிராயமென்று ஸ்ரீ சங்கராசாரியர் சொன்னார்.

இழி பிறப்பினனான பறையனுக்கு ஆசான்பதவி எங்ஙனம் அமையுமெனின், அப்படி ஐயுறல் தகாது. ஆத்மஞானம் எனப் பட்டது நித்தியமானது (எப்பொழுதுமுள்ளது), சுத்தமானது, (ஒன்றிலும்) பற்றில்லாதது; அப்படிப்பட்ட ஆத்மஞானத்தினால் ஜாதியபிமானம் குலாபிமானம் முதலிய அபிமானங்களனைத்தும் நசித்துப்போகின்றன. ஆகையால், அவன் கடையோனாயினும் பரி சுத்தமுள்ளவனேயாவன். இக் காரணங்களினால் ஜீவனுக்கும் ஈசுர னுக்கும் பேதமில்லை என்பதற்கு எவ்விதமான ஆக்ஷேபணையுமில் லையென்பது ஸ்ரீ சங்கராசாரியரது அபிப்பிராயம்.

அவதாரிகை

“𑌯𑌤𑍋 𑌵𑌾 𑌇𑌮𑌾𑌨𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇”

யதோவா இமாநி பூதாநி ஜாயந்தே

(எந்தப் பிரம்மத்தினின்று இந்தப்பூதங்கள் பிறக்கின்றனவோ) என்பதாதியாக உள்ள வாக்கியங்களினால் பரப்பிரம்மத்திற்கு ஜக த்காரணத்துவம் சொல்லப்படுகின்றது. அஃதாவது, பரப்ரம்மம் உலகத்தைச் சிருட்டித்ததாகச் சொல்லப்படுகிறது. ஜீவாத்மாவுக் கோவெனின், அப்படிப்பட்ட ஜகத்காரணத்துவம் இல்லை. ஆகை யால், பரமாத்மா ஜீவாத்மா எனுமிவையிரண்டும் எப்படி ஒன்றா கும்? அங்ஙனம் ஐயுறுவது தவறு. ஸத்துவம், ராஜஸம், தாம ஸம் என்னும் முக்குண வடிவமான அவித்தையிற் பிரதிபலித்த சைதன்னியமாகிய பிரத்யகாத்மாவானது (அதுவே ஜீவாத்மா எனப்படும்) ஸ்வப்னப்பிரபஞ்ச (கனவுலக) த்தைச் சிருட்டிக்கின் றது. அஃதாவது, அவித்தையிற் பிரதிபலித்த பிரம்மசைதன்னி யத்திற்குப் பிரத்தியகாத்மா (அஃதாவது, ஜீவாத்மா) என்று பெ யர்; ஜீவாத்மா (கனவுலகத்தைச் சிருட்டிக்கின்றது) வுக்குக் கனவு காணப்படுகின்றது. பரமாத்மா உலகத்தைச் சிருட்டித்ததெனின், ஜீவாத்மாவும் கனவுலகத்தைச் சிருட்டித்தது. ஆகவே, சிருட்டிக குந்தன்மை இரண்டிற்கும் ஏற்பட்டது. அந்தக் கனவில் அனேக

வஸ்துக்களும் காரியங்களும் அகப்படுகின்றன. அது வேறோர் உலகமாகவே தோற்றுகின்றது. ஆனால், உண்மையில் அப்படிப்பட்ட கனவுலகம் உண்டோ எனின், இல்லையென்பது யாவரும் அறிந்த விஷயம். இந்தக் கனவுலகத்திற்கும் அதன் சிருட்டிகர்த்தரெனப் படும் பிரத்தியகாத்மாவுக்கும் எத்தன்மையான சம்பந்தம் உளதோ, அத்தன்மையதேயாகுமாம் பரமேசுரருக்கும் அவராற் சிருட்டிக் கப்பட்டதெனப்படும் உலகத்திற்குமுள்ள சம்பந்தமும். உலகத்தைப் பரமாத்மா படைத்தாரென்பது கற்பிதமேயல்லாது உண்மையன்று. ஆகையால், ஜீவனுக்கும் பிரம்மத்திற்கும் வித்தியாசமில்லை என்பதாம். இதற்குப் பிரமாணம்:—

𑌯𑌥𑌾 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑍋𑌽𑌯𑌂 𑌮𑌯𑌿 𑌮𑌾𑌯𑌯𑌾 𑌵𑌿𑌜𑍃𑌮𑍍𑌭𑌿𑌤𑌃
𑌏𑌵𑌂 𑌜𑌾𑌗𑍍𑌰𑌤𑍍𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑍋𑌽𑌪𑌿 𑌮𑌯𑌿 𑌮𑌾𑌯𑌯𑌾 𑌵𑌿𑌜𑍃𑌮𑍍𑌭𑌿𑌤𑌃 ॥

யதா ஸ்வப்ந ப்ரபஞ்சோயம் மயிமாயா விஜ்ரும்பித:
ஏவம் ஜாக்ரத் ப்ரபஞ்சோபி மயிமாயா விஜ்ரும்பித:

"இந்தக் கனவுலகமானது எப்படி எனது மாயையினால் வெளியாயிற்றோ, அப்படியே இந்த விழிப்புலகமும் (ஜாக்ரத் பிரபஞ்சமும்) எனது மாயையினால் வெளியாயிற்று."

இவ்விதமாகப் பரமாத்மாவைப்போலவே பிரத்தியகாத்மாவுக்கும் ஜகத்காரணத்துவம் ஏற்படுகின்றமையால் அதற்குப் பிரம்ம பாவமும் ஏற்பட்டதாயிற்று. இஃதன்றி,

𑌤𑌤𑍍𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌤𑌦𑍇𑌵𑌾𑌨𑍁𑌪𑍍𑌰𑌾𑌵𑌿𑌶𑌤𑍍 ।

தத் ஸ்ருஷ்ட்வா ததேவாநுப்ராவிசத்

(பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்து அந்தப் பிரபஞ்சத்திலேயே பிரவேசித்தார்) என்று வேதம் கூறுவதனால் பிரத்தியகாத்மாவானது ஸாக்ஷாத்தாகப் பரப்பிரம்மஸ்வரூபியேயல்லாது வேறன்று. ஆகையாற்றான், "தத்துவமஸி" (அவனே நீயாகின்றாய்) என்பதாதிய மகாவாக்கியங்கள் ஜீவபாவமுடையவனுக்கு (தான் ஜீவனென்று நினைத்திருப்பவனுக்கு) ஸ்வபாவஸித்தயாக ஏற்பட்டுள்ள (இயற

கையிலமைந்துள்ள) பிரம்மபாவத்தைப் போதிக்கின்றன (நீயே பிரம்மமென்று விளக்குகின்றன). இங்ஙனமாக, பிரத்தியகாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் வேற்றுமை இலதென்னுரைப்பதில் எவ்விதமான ஆக்ஷேபணையும் இல்லையெனக் கருதிச் சொல்லுகின்றூர்:-

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵𑌾𑌹𑌮𑌿𑌦𑌂 𑌜𑌗𑌚𑍍𑌚 𑌸𑌕𑌲𑌂 𑌚𑌿𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌿𑌤𑌂
𑌸𑌰𑍍𑌵𑌂 𑌚𑍈𑌤𑌦𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾 𑌤𑍍𑌰𑌿𑌗𑍁𑌣𑌯𑌾𑌽𑌶𑍇𑌷𑌂 𑌮𑌯𑌾 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌂
𑌇𑌤𑍍𑌥𑌂 𑌯𑌸𑍍𑌯 𑌦𑍃𑌢𑌾 𑌮𑌤𑌿𑌃 𑌸𑍁𑌖𑌤𑌰𑍇 𑌨𑌿𑌤𑍍𑌯𑍇 𑌪𑌰𑍇 𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑍇
𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 𑌸 𑌤𑍁 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 𑌗𑍁𑌰𑍁𑌰𑌿𑌤𑍍𑌯𑍇𑌷𑌾 𑌮𑌨𑍀𑌷𑌾 𑌮𑌮 ॥௨॥

ப்ரம்மைவாஹ மிதம் ஜகச்ச ஸகலம் சின்மாத்ர விஸ்தாரிதம்
ஸர்வம் சைத தவித்யயா த்ரிகுண்யா ஸேசம் மயாகல்பிதம்
இத்தம் யஸ்ய த்ருடா மதி ஸ்ஸுகதரே நித்யே பரே நிர்மலே
சண்டாளோஸ்து ஸது த்விஜோஸ்து குரு ரித்யேஷாமநீஷா மம

இதம்—கண்ணுக்ககப்படுவதும்

சின்மாத்ரவிஸ்தாரிதம்—சைதன்னியத்தினுல் நிரம்பியதும்

ஸகலம்—ஸமஸ்தமான (எல்லா)

ஸேசம்—ஜீவேசுர ரூபமான

ஸர்வம் சைதஜ்ஜகத்—இந்தப் பிரபஞ்சம் முழுதும்

த்ரிகுணயா—ஸத்துவகுண ரஜோகுண தமோகுணங்கள் பொருந்திய

அவித்யயா—அஞ்ஞானம் என்னும் உபாதியினுல்

மயா—என்னுல்

கல்பிதம்—கற்பிக்கப்பட்டது

அஹம் து—நானே எனின்

ப்ராஹ்மைவ—பரப்பிரம்மஸ்வரூபியே

971

இத்தம்—இப்படியாக

யஸ்ய—எவனுக்கு

ஸுகதரே—ஸுகரூபமாகவும்

நித்யே—நாசமில்லாததாகவும்

நிர்மலே—அழுக்கில்லாததாகவும் (இருக்கிற)

பரே—பரப்பிரம்மத்தினிடத்து

மதி:—புத்தி

த்ருடா (அஸ்தி)—திடமாக இருக்கின்றதோ

ஸ:—அப்படிப்பட்டவன்

சண்டாளோஸ்து—சண்டாளனாயினும்

த்விஜோஸ்து—பிராமணனாயினும்

குரு ரிதி—குரு என்பது

மம—எனது

மனீஷா—அபிப்பிராயம்

ஏஷா—இப்படிப்பட்டது

"கண்ணுக் ககப்படுவதும் சைதன்னியம் நிறைந்ததும் ஜீவே சுவரருமானதுமாயுள்ள இந்தப் பிரபஞ்சமனைத்துப் ஸத்துவம் ராஜஸம் தாமஸம் என்னும் மூன்று குணங்கள் பொருந்திய அஞ்ஞானமெனப்படுகிற உபாதியினல் என்னுற் கற்பிக்கப்பட்டது. நானே பரப்பிரம்மஸ்வரூபி. இங்ஙனம் எவனுக்கு, சுகரூப்மாகவும் நாசமில்லாததாகவும் அழுக்கில்லாததாகவும் இருக்கிற பரப்பிரம்மத்தினிடத்துப் புத்தி உறுதியாக இருக்கின்றதோ, அவன் சண்டாளனாயினும் துவிஜனாயினும் குரு என்பதுவே எனது அபிப்பிராயம்."

நித்தியமாகவும் நிர்மலமாகவுமிருக்கிற பரப்பிரம்மம் நானே என்றும்-வெளியிலகப்படுகிற (கண்ணுக்குத்தெரிகின்ற) ஜீவேசுர

பேதமான உலகம் மாயாமயமென்றும் நினைக்கிறவன் எவனுயிருந் தாலும் அவன் எனக்குக் குரு ஆவனென்று ஸ்ரீ சங்கராசாரியர் சொல்லுகின்றார்.

இவ்வுலகம் பரப்பிரம்மத்திறைற் சிருஷ்டிக்கப்பட்டதென்கிறார் கள். பரப்பிரம்மமோ சுத்த சித்து (ஞான) வடிவமானது. உலக மென்பது தோற்றமேயல்லாது உண்மையன்று. இவ் வுலகமனைத் தும் பிரம்மஸ்வருபமேயாம். உலகமெனும் நினைவு, மூன்று குண ங்கள் பொருந்திச் சாதனமாக என்னிடத்து அமைந்துள்ள மூலாஞ் ஞானத்தினுற் கற்பிக்கப்பட்டது. எந்தக் காரணத்தினுல், ஈசுவர னுடன் கூடிய இவ் வுலகம் (உண்மையிலில்லாதிருக்க) என்னிடத்து ஆரோபிக்க (ஏற்ற) ப்பெற்றதோ (நான் படைத்ததாகக்கொள்ளப் பெற்றதோ), அந்தக் காரணத்தினுலேயே ஜகத்துக்கு ஆதாரமாக வும் சித்துருபமாகவுமிருக்கிற பரப்பிரம்மம் நானுகின்றேன்.

அஃதாவது, உலகமானது உண்மையில் இல்லாதிருக்க, இரு ப்பதுபோலத் தோற்றுகின்றது. உண்மையில் இருப்பது பரப்பிரம் மமேயாம், பிறிதொன்றன்று. இங்ஙனம் காணும் தோற்றம் அவித் தையினுலுண்டாயிற்று. உலகம் இருப்பதுபோலத் தோற்றுவத ற்குக் காரணம் அவித்தையாகும். இவ்வாறே, அந்த அவித்தையி னுலேயே நான் ஜீவனென்றும், ஈசுவரனெருவன் உளனென்றும் பிரபஞ்சம் உளதென்றும் நினைக்கலானேன். ஜீவன், ஈசுவரன், பிர பஞ்சம் ஆகிய இவை வேறுவேருக உளவென்று நினைப்பதற்குக் காரணம் அவித்தையே (அஞ்ஞானமே) யாகும். இந்த வேற்று மை உண்மையானதன்று. உண்மை எதுவெனின், அனைத்திற்கும் ஆதிகாரணமாகிய பரப்பிரம்மம் நானே என்பதாம். மிக்க ஆனந் தரூபமாகவும், நாசமில்லாததாகவும், அனைத்திற்குஞ் சிறந்ததாகவும் அஞ்ஞானமும் அதன் பயன்களுமில்லாததாகவும் இருக்கிற பரப் பிரம்மத்தினிடத்து மேற்சொல்லிய வண்ணம் உறுதியாகப் புத்தியை வைத்திருக்கின்ற மோக்ஷகாமியானவன் (மோக்ஷத்தை விரும்பு வோன்)—நிரதிசயானந்த நித்திய சுத்த ஸ்வப்பிரகாசப் பிரம்மவிஷ யமான ஐக்கியானுஸந்தானத்தினுல் நிலையான அனுபவம் பெற்ற வன்—நித்தியமாகவும் (எப்பொழுதும் உள்ளதாகவும்) சுத்தமாக

வும் இருக்கிற பிரம்மஸ்வரூபியே ஆதலின், அவன் சண்டாளனாக இருக்கினும், அல்லாது, துவிஜனாக (இருபிறப்பாளனாக) இருக்கினும் ஆசாமீன என்பது தமது நிச்சயமான அபிப்பிராயமென்று ஸ்ரீ சங்கராசாரியர் சொல்லுகின்றார். ஜீவனுக்கும் பிரம்மத்திற்கும் அபேதம் சுலபசாத்தியமென்பது (வேற்றுமை இல்லையென எளிதில் அமையுமென்பது) இதன் கருத்தாகும்.

உலகத்தின் உண்மையைப்பற்றி (அஃது உண்மையில் இருக்கிறதா இல்லையா என்பதைப்பற்றி) இதுவரையில் விசாரித்தோம். நமது மானிடத் தன்மைக்குரிய அற்ப சாதனங்களையும் அற்ப அறிவையுங்கொண்டு நோக்கின், உலகம் உண்மையில் இருக்கிறதென்றே நாம் கொள்கின்றோம்; அஃது இருக்கிறதென்று எல்லாவிதத்திலும் உணர்கின்றோம். நாம் அதனிலேயே வாழ்ந்து உழன்று வருகின்றோம் நாம் செய்யுங் காரியங்களனைத்தும் உலகம் இருக்கிறதென்னும் எண்ணத்தின்பேரில் ஏற்பட்டிருக்கின்றன. இந்தக் கொள்கையின்மீதே நாம் விவகரிக்கிறோம், ஒவ்வொன்றையுஞ் செய்கிறோம். ஆகையால் உண்மையான உலகமொன்று இருக்க வேண்டும். அற்றேல், இவ் வாழ்க்கையில் நாம் தினந்தோறும் விவகரிப்பதுபோல, உலகம் இருக்கிறதென்னும் அபிப்பிராயத்தை சித்தாந்தமாகக்கொண்டு நடக்கமாட்டோம். அஃது அங்ஙனமே இருக்கவேண்டுமென்பதும், இருக்கக்கூடுமென்பதும் முத்துச்சிப்பியில் ஆரோபிக்கப்பட்ட வெள்ளியெனும் அபிப்பிராயத்தின் உதாரணத்தினால் விளங்கும். இதனில், முத்துச்சிப்பியினிடத்து வெள்ளி பாவம் (வெள்ளியெனும் அபிப்பிராயம்) பொய்; உண்மையாக அங்கு வெள்ளியில்லை. ஆயினும், வேறு இடத்தில் உண்மையான வெள்ளி உளதன்றே? முத்துச் சிப்பியிற் காணப்படும் வெள்ளி அவ் வுண்மையான வெள்ளியினின்றும் வேறுபட்டது. ஒன்று பிரமையினால் ஏற்பட்ட மித்தை (பொய்), மற்றது உண்மையாக இருப்பது. அதுபோல, நாம கண்களினாலும் மற்றைப் புலன்களினாலும் கண்டு அனுபவித்து விவகரிக்கும் இவ் வுலகமும் உண்மையாக இருக்கலாமே. அப்படி அஃது உண்மையாக இருக்கின், பிரம்மம் ஒன்றே உளது, பிறிதொன்றில்லை என்னும் வாதம் நிலைக்குமோ?

பரமாத்மாவே அறிகிறவர் (திரஷ்டா—பார்க்கிறவர்). அவரிடத்து ஆரோபத்தினால் (பிரமையினால் ஏற்றப்படுதல்) உலகம் இருப்பதுபோலத் தோற்றுகின்றது. அஃது, உண்மை இன்னதென்று அறியாமற்கொண்ட தவறான எண்ணமாம். முத்துச்சிப்பியிற் காணப்படும் வெள்ளி உண்மையில் இல்லாதிருப்பதுபோல, உலகமும் இல்லாததேயாகும். முத்துச் சிப்பியானது வெள்ளியைப்போல தோற்றுகின்றது; ஆனால் வெள்ளி அங்கே இல்லை. அதனிடத்துத் தோற்றும் வெள்ளியெனு மபிப்பிராயம் பொய்யானது. வெளித்தோற்றத்திற்கு உலகம் எனக் காணப்படினும் உண்மையில் அது பிரம்மமேயாகும்; உலகம் என்பது இல்லை இல்லை.

உலகம் என்பது இல்லையென்று நாம் சொல்வதனால் அது காணக்கூடிய வஸ்துவன்று, அறியக்கூடியதன்று, என்று சொல்லலாமா? அங்ஙனம் சொல்லக்கூடாது. துவித (இரட்டை) த்தன்மை வாய்ந்த இவ் வுலகம் இயற்கையில் ஜடமானது, உயிரற்றது. பரமாத்மாவின் ஸ்வப்பிரகாசமயமான சித்து (ஞானம்) அதனில் எங்கும் வியாபித்து விவகரிப்பதனால் அது காணப்படலாயிற்று. நாம் அறிந்துகொள்ளக்கூடிய வாழ்வு அதற்கு ஏற்பட்டது. இதனாலேயே இந்தத் துவிதப் பிரபஞ்சத்தை நாம் தவறாக மதிக்கவும் கொள்ளவும் காரணமுண்டாயிற்று. நாமரூபங்கள் (பேரும் உருவமும்) இல்லாத பிரம்மத்தினிட்டத்துத் தோற்றும் ஆரோபமேயாதலின், (இந்தத் துவிதப்பிரபஞ்சம்) பொய்யேயல்லாது மெய்யன்று. சேஷித்து (மிகுந்து) இருப்பது யாதெனின், உண்மையில் இருப்பது யாதெனின், ஸச்சிதானந்தத்தன்மைவாய்ந்த பிரம்மவஸ்துவொன்றேயாம். இவ்வாறாக 'ஒன்றேயுளது, மற்றொன்றிலது' எனுங் கொள்கையானது நிராக்ஷேபமாக நிலைநிறுத்தப்பட்டது.

[மேற்சொல்லிய விஷயங்கள் எளிதிற்புலப்படுமாறு அவைகளிற் பொதிந்துகிடக்கும் நியாயங்களைச் சுருக்கித் தெளிவாக வரை [illegible]

1. சாதாரணமான மானிடர்களாகிய நாம் ஸம்பந்தப்பட்டவரையில் இவ் வுலகமானது நமது விவகார நடவடிக்கைகளுக்கு உண்மையானதே. அதனைப்பொய்யென்று சொல்வதற்கு நாம் அருக

ரல்லேம். நமது தினசரிவாழ்க்கையில் அதனை மதியாதிருக்கவும் (அஃது இல்லையென்றிருக்கவும்) ஒவ்வொரு விவகாரத்திலும் அதன் சம்பந்தத்தைக் கவனியாதிருக்கவும் வல்லோமல்லேம்.

2. உலகமும் நமது கண்ணுக்குப் புலப்படும் எல்லா ராசிகளும் இடைவிடாது மாறிக்கொண்டேயிருக்கின்றன; ஆதலின் அவை க்ஷணகால ஜீவிதம் வாய்ந்தனவேயன்றி நிலையாக இருப்பனவல்ல; நசிக்குந்தன்மையுள்ளன. உலகம் ஜடமானது, உயிரற்றது.

3. பரமாத்ம தத்துவமானது எங்கும் வியாபித்திருப்பதனால் உலகம் விளங்கலாயிற்று; அதனால் உலகத்திற்குச் சக்தி கூடியது. அந்தப் பரமாத்ம தத்துவம் சுத்தமானது, சாசுவதமானது, அழியாதது, எப்பொழுதும் ஒரேவிதமாக இருப்பது (விகாரமற்றது). அதனால் உலகத்திற்கு ஒருவாறாக வாழ்க்கை ஏற்பட்டதேயொழிய அதற்கு வாழ்க்கை (இருக்குந் தன்மை) என்பது தனியே இல்லை.

4. நிஜமான தத்துவஞானியே, தேர்ந்த ஆராய்ச்சிகளினாலும் பகுத்தறிவினாலும், உலகத்தின் உண்மையான நிலைமையை அறியக் கூடியவனாவன். அது பொய்யான வாழ்க்கையுற்றதென்றும், உண்மையில் அமர்ந்திருப்பது பிரம்மமெனுந் தத்துவமொன்றே யென்றும் அறியக்கூடியவன் அவனே. உலகம் அவனுக்குப் பொய்யாகும்; வகுக்கக்கூடாததாகி, மாறுதல் (விகாரம்) இல்லாததாகி, உண்மையான வாழ்க்கையென்பது மற்றொன்றில்லதாகி விளங்கும் அந்த ஸத்ஸ்வரூபமான தத்துவத்துடன் அவன் ஐக்கியமாகின்றான்.

5. சாதாரணமான மானிடனோவெனின், அவன் மனப்பயிற்சியும் பகுத்தறிவுமில்லாதவனாதலின் மேற்சொல்லிய உண்மையைக் கிரகிக்கமாட்டாதவனாகின்றான்; உலகம் மெய்யானதென்று அவன் நினைக்கின்றான். முத்துச்சிப்பியைக் கண்டு வெள்ளியென்று நினைப்பதுபோல அவன் பிரமையினால் உண்மையை உணராது உலகத்தை மெய்யெனக் கொள்கின்றான்].

𑌶𑌶𑍍𑌵𑌨𑍍𑌨𑌶𑍍𑌵𑌰𑌮𑍇𑌵 𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑌖𑌿𑌲𑌂 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌯 𑌵𑌾𑌚𑌾 𑌗𑍁𑌰𑍋𑌃
𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌨𑌿𑌰𑌨𑍍𑌤𑌰𑌂 𑌵𑌿𑌮𑍃𑌶𑌤𑌾 𑌨𑌿𑌰𑍍𑌵𑍍𑌯𑌾𑌜𑌶𑌾𑌨𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌾
𑌭𑍂𑌤𑌂 𑌭𑌾𑌵𑌿 𑌚 𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌂 𑌪𑍍𑌰𑌦𑌹𑌤𑌾 𑌸𑌂𑌵𑌿𑌨𑍍𑌮𑌯𑍇 𑌪𑌾𑌵𑌕𑍇
𑌪𑍍𑌰𑌾𑌰𑌬𑍍𑌧𑌾𑌯 𑌸𑌮𑌰𑍍𑌪𑌿𑌤𑌂 𑌸𑍍𑌵𑌵𑌪𑍁𑌰𑌿𑌤𑍍𑌯𑍇𑌷𑌾 𑌮𑌨𑍀𑌷𑌾 𑌮𑌮 ॥ ௫ ॥

சச்வந் நச்வரமேவ விச்வ மகிலம் நிச்சித்ய வாசாதுரோ:
நித்யம் ப்ரஹ்ம நிரந்தரம் விம்ருசதா நிர்வ்யாஜ சாந்தாத்மனு
பூதம் பாவிச துஷ்க்ருதம் ப்ரதஹதா ஸம்விந்மயே பாவகே
ப்ராரப்தாய ஸமர்ப்பிதம் ஸ்வவபு ரி த்யேஷா மநீஷா மம

அகிலம் = ஸமஸ்தமான (எல்லா)

விச்வம் = பிரபஞ்சத்தையும்

சச்வத் = அடிக்கடி

நச்வரமேவ = நிலையற்றதேயென்று

நிச்சித்ய = நிச்சயித்துக்கொண்டு

குரோ: = குருவினுடைய

வாசா = வாக்கியத்தினுல்

நிரந்தரம் = எப்பொழுதும்

நித்யம் = நாசமில்லாத

ப்ரஹ்ம = ப்ரப்பிரம்மத்தை

விம்ருசதா = விசாரிக்கிற

நிர்வ்யாஜ சாந்தாத்மனு = கபடமில்லாத சாந்தமெய்திய மனத்துடன் கூடின

ஸம்விந்மயே = ஞானரூபமான

பாவகே = அக்னியில்

பூதம்=பூர்வஜன்ம சம்பந்தமானதும்

பாவிச=இனி வரத்தக்கதும் (ஆகிய)

துஷ்க்ருதம்=பாபகர்மாவை

ப்ரதஹதா=எரிக்கின்றவனால்

ஸ்வ வபுः=நிஜ சரீரமானது

ப்ராரப்தாய=பிராரப்தத்திற்கு

ஸமர்ப்பிதம்=கொடுக்கப்பட்டது (அஃதாவது, பிராரப்த கர்மாவை மாத்திரம் அனுபவிப்பான்)

இதி=இவ்விதமாக

மம=என்னுடைய

ஏஷா மநீஷா=இதே அபிப்பிராயம்

"சற்குருவினது வாக்கியத்தை அனுசரித்துக் கபடமென்பது சிறிதும் இல்லாததாகிச் சாந்தமே குடிகொண்டிருக்கும் மனத்துடன், பிரபஞ்சமனைத்தும் நிலையற்றதென (அநித்தியமென) அடிக்கடி நிச்சயித்துக்கொண்டு, ஒருபொழுதும் அழியாத்தன்மை வாய்ந்த பரப்பிரம்மத்தை நாடி விசாரிப்பவனெவனோ,— பூர்வ ஜன்ம சம்பந்தமான பாபகர்மங்களையும் இனி வரத்தக்கவைகளையும் ஞானமெனும் அக்கினியினால் எரித்து ஒழிப்பவனெவனோ,—அவனுடைய சரீரமானது பிராரப்த கர்மத்தை மாத்திரம் அனுபவித்து அந்தக் கடனைத் தீர்ப்பதற்காக ஏற்பட்டதாகும். இதுவே எனது துணிபு."

நற்கதியை நாடினவன் சற்குருவை அடுத்து அவரது உபதேச மொழிகளைக் கவனத்துடன் கேட்டுப் பின்னர்த் தன்மனத்தில் அவைகளை அடிக்கடி மேன்மேலும் சிந்தித்து, உலகம் சாசுவதமில்லாதது, நிலையற்றது, இடைவிடாது மாறிக்கொண்டேயிருக்கும் இயல்புடையது என்று அடிக்கடி நிச்சயித்து உணரும் அனுபவஞானம் பெறவேண்டும். இவ்வாறு உறுதியான தீர்மானங் கொண்டவனுகித் தானே பரப்பிரம்மமென்று எப்பொழுதும் ஐக்கியபாவம் கொண்டாடவேண்டும். இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் எனும் எல்லாக் காலத்தும் அந்தப் பரப்பிரம்மம் அழியா

திருப்பது, பிரபஞ்சத்திற்கு வேருனது, தனக்குத் தானே பிரகாசிக்கிற ஞானவடிவமானது, எப்பொழுதும் ஆனந்தம் (சுகம்) நிறைந்தது என்று உணர்ந்து அனுபவிக்கவேண்டும். பரப்பிரம்மம் இத்தன்மையதென்று அறிந்துகொள்வதற்கு வெகுகாலம் செல்லும். ஆனதுபற்றியே பதஞ்சலி ரிஷி பின்வரும் சூத்திரத்தை உரைக்கலாயினர்:—

𑌸 𑌤𑍁 𑌦𑍀𑌰𑍍𑌘𑌕𑌾𑌲𑌨𑍈𑌰𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌸𑌤𑍍𑌕𑌾𑌰𑌾𑌸𑍇𑌵𑌿𑌤𑍋 𑌦𑍃𑌢𑌭𑍂𑌮𑌿𑌃 ॥

ஸது தீர்க்ககால நைரந்தர்ய ஸத்காரா ஸேவிதோ த்ருடபூமி:

"அத்தகைய பிரம்மபாவனை வெகுகாலம் இடைவிடாது தியானிப்பதனுலேயே சித்திக்கும்."

நீடித்தகாலம் ஊக்கத்துடன் நற்கருமங்களையே செய்துவருவதனுற் பிரபஞ்சத்திற்கும் தனக்குமுள்ள பற்று அற்றுப்போகின்றது, ஞானம் உதிக்கின்றது; அதன் பயனுக, "நானே பிரம்மம்" என்று அவன் அனுபவத்திற் கண்டறிகின்ருன். பிரம்மத்தை இவ்விதமாகவே அறியவேண்டுமென்று ஸ்ரீசங்கராசாரியர் காட்டுகின்ருர்.

𑌦𑍃𑌕𑍍𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌗𑌗𑌨𑍋𑌪𑌮𑌂 𑌸𑌰𑍍𑌵𑌗𑌤𑌂 𑌯𑌦𑌦𑍍𑌵𑌯𑌂
𑌤𑌦𑍇𑌵 𑌚𑌾𑌹𑌂 𑌸𑌤𑌤𑌂 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌃 ॥

த்ருசஸ்வருபம் ககனேபமம் ஸர்வகதம் யதத்வயம்
ததேவ சாஹம் ஸததம் விமுக்த:

"திருக்ஸ்வரூபமாகவும் (பார்க்கிறவனுகவும்) ஆகாசத்தைப்போன்றதாகவும் இரண்டற்றதாகவும் இருக்கிற பிரம்மஸ்வரூபி நானே என்று எப்பொழுதும் பாவிக்கவேண்டும் (மனத்திற்கொள்ளவேண்டும்)."

இவ்விதமாக எப்பொழுதும் பிரம்மத்தை மனத்திற்கொள்வதற்கான உபாயங்களைச் சொல்லுகின்ருர்:—

அகங்காரம், கபடம், அசுரகுணங்களான காமம் குரோதம் முதலியன ஆகிய இவைகளில்லாத ஞானிகள் தமது தேகத்தைப் பிராரப்தகருமத்திற்குச் சமர்ப்பித்துவிடுகின்ருர்கள். அஃதாவது,

சுகம் வந்தாலும் துக்கம் வந்தாலும் அவற்றினால் மனத்தைச் சஞ்சலப்படுத்திக்கொள்ளாமல் அவற்றைப் பொறுத்து அனுபவிக்கின்றார்கள். சுகத்தினால் மனவெழுச்சியும் துக்கத்தினால் மனவாட்டமும் அவர்கள் கொள்ளார்கள். அவையெல்லாம் பிராரப்த கருமத்தின் பயனாகவருவனவென்று அறிந்து, எவ்விதமான மனோவிகாரமும் கொள்ளாதவர்களாகி, அவற்றை அனுபவிக்கின்றனர். [சமுத்திரத்திற் குளிப்பவன் அலைகள் வரும்போது தலையைவணங்கிக்கொடுத்துக்கொண்டு தன் காரியத்தை (நீராடுங் கிரியத்தை) நிறைவேற்றிக்கொள்ளுகிறானன்றோ? அலைகள் அவனுடைய தலைமீது ஓடுகின்றன. அவன் ஓரலைக்கு வியப்பதும் மற்றோரலைக்குத் துக்கிப்பதும் உண்டோ? அலை பெரியதாயினும் சிறியதாயினும் அதனை ஓடவிட்டு, அதனால் தள்ளுண்டு தான் ஓடாமல், சமுத்திரத்து நீரில் ஸ்நானம் செய்துவருவதே அவனுடைய காரியம். இங்கே, பிரம்மவிசாரணை செய்துவருகிறவனுக்குச் சுகதுக்கம் முதலியனவே அலைகளாகும், பரப்பிரம்மமே சமுத்திரத்து நீராகும்]. இதுவே ஞானிகள் செய்யும் உபாயமாம்.

"கபடமில்லாத சாந்தமான மனமுடைய (நிர்வ்யாஜ சாந்தாத்மனா)".—'நிர்வ்யாஜம்'=போக்கடிக்கப்பட்ட வியாஜம்; வியாஜம்=டம்பம் தர்ப்பம் முதலியன; டம்பம்=சூது, மோசம், வஞ்சகம், தீயொழுக்கம், பொய்யாசாரம், வைராக்கிய வேஷம், செருக்கு, படாடோபம், பாபம், கொடுமை; தர்ப்பம்=கர்வம், மமதை, அகங்காரம், அலக்ஷ்யம், வெடுவெடுப்பு. டம்ப தர்ப்பாதிகள்=காமக்குரோதாதிகள். இவை ஆசுரவாசனைகள் எனப்படும், அஃதாவது, அசுரருக்குரிய குணங்களாம். இந்த ஆசுரவாசனைகளைப் போக்கடிக்க வேண்டியது. 'நிர்வ்யாஜ' என்றதனால் ஆசுரவாசனாக்ஷயம் குறிக்கப்பட்டது. 'சாந்தாத்மா'.—சாந்தம்=நஷ்டம்; ஆத்மா=மனம்; சாந்தாத்மா=நஷ்டமான (நசித்துப்போன) மனம். 'நிர்வ்யாஜ சாந்தாத்மனா' என்றதனால், ஆசுரவாசனாக்ஷயமும் மனோநாசமும் ஆக வேண்டியது அவசியமென்று சொல்லப்பட்டது. வாஸனாக்ஷயமும் மனோநாசமும் செய்தவனே ஞானியாவன் என்பதாம். வாஸனையாவது பூர்வஜன்மத்துக் கருமங்களின் வாஸனையாம்.

பூர்வஜன்மத்துக் கருமங்களின் சம்பந்தமெனப்படும் 'வாஸனை' களை நசிக்கச் செய்வதாவது என்ன? 'மனோநாசம்,' அல்லது, மனத்தை அடக்கியாள்வது என்பது யாது? அவ் விரண்டு காரியங்களையுஞ் சாதிப்பது எங்ஙனம்? இவ் வினாக்களுக்கு விடையளிக்குமிடத்து.—டம்பம் முதலான சித்தவிருத்திகள் (மனோவிகாரங்கள் = மனத்தில் மாறிமாறித் தோன்றுந் தன்மைகள்) முன்பின் சந்தர்ப்பங்களை அனுசரியாமலே திடீரென்று உண்டாகின்றன. அதற்குக் காரணம் பூர்வத்தில் நமது நடவடிக்கைகளின் வழக்கத்தினால் நம் மனத்தில் ஆழ்ந்து பதிந்து கிடக்கும் ஸம்ஸ்கார விசேஷமேயாம் (மனப்பயிற்சியின் தன்மையே காரணமாகும்). அதுவே 'வாஸனை' எனப்படும். முற்பிறப்புக்களில் நமக்கு இருந்த அனுபவ அனுஷ்டானங்களின் பயனாக இப்பொழுது நம் மனத்தில் தோற்றுவது 'வாஸனை' யாகும். இந்த வாஸனையை நசிக்கச்செய்வது எங்ஙனமெனின், ஆத்மானாத்மவிவேகத்தினால் நசிக்கச் செய்யவேண்டும். இது மெய், இது பொய், இஃது அழியாதிருக்கும் ஆத்மவஸ்து, இது நசிக்குந் தன்மையதான அனாத்மவஸ்து என்று தெரிந்து கொள்ளும் பகுத்தறிவே 'ஆத்மானாத்மவிவேகம்' ஆகும். இப்படிப்பட்ட பகுத்தறிவினால் அகங்காரமின்மை முதலிய தெய்வத்தன்மையான வாசனைகள் பிறக்கின்றன. அகங்காரமின்மை முதலியன நற்குணங்களாகும். இந்த நற்குணங்கள் குடிகொண்டிருக்குமிடத்து, உண்மை இன்னதென்று அறியாத அஞ்ஞானத்தினால் (எங்கும் நிறைந்து குடிகொண்டிருக்கும் ஆத்மாவை யுணர்ந்தறியுஞ் சக்தி இல்லாமையினால்) உண்டாகிற டம்பம் முதலிய துர்க்குணங்கள் பிறவா. தெய்விகத்தன்மைவாய்ந்த நற்குணங்கள் படிவதனால் டம்பம் முதலியன தலைக்காட்டாமல் ஒளிந்து ஓடி ஒழிகின்றன.

ஒரு பெருஞ் சோதிச்சுடரினின்று அனேகஞ் சிற்றொளிகள் உண்டாவதுபோல (ஒரு பெரிய தீபத்தினின்று சிறிய தீபங்கள் பல உண்டாவதுபோல), அந்தத் தெய்வத்தன்மையான நற்குணத்தினின்று அனேக ஸத்துவகுணங்கள் உற்பத்தியாகின்றன. அந்த (ஸாத்விக விருத்திகளின் ஸமூஹமே) நற்குணங்களின் தொகுதியே 'அந்தக்கரணபரிணாமம்' (அந்தக்கரணத்தின் திரிபு) எனப்படும்.

இவ்விதமான (மனத்தின் பரிணாமத்தினால்) பரிசுத்தமான அந்தக் கரணத்தினால், காரணங்கடந்து (உற்பத்தியில்லாமல்) இரண்டற்று எதனிலும் பற்றற்று நிற்கும் பிரம்ம ஸ்வரூபத்தின் பிரபாவம் ஓராெருபொழுது விளங்கலாகும்.

[இப்படியாக ஆத்மஞானத்தை விரும்புகிறவன் தனது அந்தக் கரணத்தில் ஆழ்ந்து கிடக்கும் அழுக்குகளையும் இழிந்த தன்மைகளையும் களைந்து அதனைச் சுத்தப்படுத்திக்கொள்ளவேண்டும். கண்ணாடி சுத்தமாக இருந்தாலன்றி அதனில் முகம் பிரதிபலிக்காது. ஆதலின், நாம் அந்தக்கரணத்தைத் திருத்திக்கொள்ளவேண்டும். அப்பொழுது அது பலப்பட்டு, சமுசாரமெனும் சமுத்திரத்தை நாம் கடந்து அக்கரையிலுள்ள ஆத்மாவைத் தரிசிப்பதற்கானதொரு பாலம் போலவும், ஆத்மாவின் சுத்த சைதன்னியம் பிரதிபலித்து நமக்கு விளங்குவதற்கானதொரு கண்ணாடி போலவும் ஆகும். ஆதலின் அந்தக்கரண பரிணாமம் அவசியமாம்].

விளக்கிச் சொல்லின், அந்தக்கரண பரிணாமமாவது மனத்தில் உதிக்கின்ற பலவகையான நினைவுகளைத் தடுத்து (மனம் அன்னிய விஷயங்களிற் செல்லாமல்) நாம் மேற்கொண்ட நினைவையே மனம் நாடி நிலையாக நிற்குமாறு அதனை அடக்கி ஆள்வதாம். மேற்கொண்ட நினைவாவது பரப்பிரம்ம விஷயமான தியானமே. அந்தத் தியானம் உறுதியாக நிலைப்படின் இதரவிஷயங்களும் நினைவுகளும் பறந்தோடிப்போம்; இதரமான நினைவுகளே தோன்றுவாம். இத்தன்மையான நிலை வந்தவுடனே 'நிரோத விருத்திகள்' (பிரம்மத்துடன் ஐக்கியமாவதற்கான பான்மைகள்) கிளம்புகின்றன. அந்த நிரோத விருத்திகள் மனத்துடன் கலந்தேயிருக்கின்றன; மனமோ வேறு விருத்திகளுக்கு (நினைவுகளுக்கு) இடங்கொடுப்பதில்லை. இது மனோநாசன நிலைமையெனப்படும் (சாதாரணமாக மனத்திற்குள்ள இயற்கை நசித்ததென்பது அர்த்தம்). இந்த நிலைமை வராவிடின், அஃதாவது, இவ்வாறு மனத்தை அடக்கி வசப்படுத்திக்கொள்ளாவிடின், அது பற்பல நினைவுகளை நினைத்து அலைந்துகொண்டேயிருக்கும்; ஒருவேளை, வெளிக்காரணங்களின் பலத்தினால், டம்பம் முதலான துர்க்குணங்கள் மனத்திற் குடிகொண்டு அதனை ஆட்டி

அலைக்கும். இவ்வாறாக வாசனைகள் நசியாமல் தலையெடுத்து ஓங்கும். வாசனைகளைப் போக்கும் வரையில் மனத்திற் பற்பல விருத்திகள் தோன்றி அதனைச் சஞ்சலப்படுத்திக் கொண்டேயிருக்கும். அது மனோநாசமாகாததற்கு அடையாளமாம். இந்தக் கருத்தே பின் வரும் சுலோகத்திலும் விளங்குகின்றது:—

𑌯𑌾𑌵𑌦𑍍𑌵𑌿𑌲𑍀𑌨𑌂 𑌨𑌮𑌨𑍋 𑌨 𑌤𑌾𑌵𑌦𑍍𑌵𑌾𑌸𑌨𑌾𑌕𑍍𑌷𑌯𑌃
𑌨𑌕𑍍𑌷𑍀𑌣𑌵𑌾𑌸𑌨𑌾 𑌯𑌾𑌵𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌤𑌾𑌵𑌨𑍍𑌨𑌶𑌾𑌮𑍍𑌯𑌤𑌿 ॥

யாவத்விலீனம் நமனோ ந தாவத் வாஸனாக்ஷயஃ
நக்ஷீணவாஸனா யாவச்சித்தம் தாவந்நசாம்யதி

"மனம் லீனமாகாதிருக்கும் வரையில் வாசனை நசிக்காது; வாசனை நசியாதவரையில் மனம் நசிக்காது."

இவையிரண்டும் நசிக்கவேண்டுமானால் ஞானம் உதயமாக வேண்டும். ஞானத்தினாலன்றி வாசனை க்ஷீணிக்காது, மனம் நசிக்காது என்று வேதங்கள் முறையிடுகின்றன. அந்தத் தத்துவஞானம் எப்படி யுண்டாகுமெனின், ஆசுரவாசனைகளைப் போக்கடிக்குந் தன்மையதான தெய்வவாசனையின் விசேஷத்தினால் அது (தத்துவ ஞானம்) பிறக்கும். சுருதிகள், 𑌶𑌾𑌨𑍍𑌤𑌃, 𑌦𑌾𑌨𑍍𑌤𑌃 (சாந்தஃ, தாந்தஃ) என்று சொல்வதும், ஸ்மிருதிகள், 𑌅𑌮𑌾𑌨𑌿𑌤𑍍𑌵𑌮𑌦𑌮𑍍𑌭𑌿𑌤𑍍𑌵𑌂 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌯𑌦𑌤𑍋𑌽𑌨𑍍𑌯𑌥𑌾 ॥ (அமானித்வ மதம்பித்வம் அஜ்ஞானம் யததோன்யதா) என்று சொல்வதும் இந்தத் தாற்பரியத்தைக்கொண்டேயாம்.

தன்னைவிடப் பிறிதான (வேறான) தேகம் இந்திரியங்கள் முதலியவற்றை "நான்" என்றும் "என்னுடையது" என்றும் கொண்டாடுவது அபிமானம் எனப்படும். இத்தகைய அபிமானம் இல்லாதிருப்பதே 'ஞானம்' பிறப்பதற்குச் சாதனமாகும். 'ஞானம்' என்னும் பதத்திற்கு '(ஞாயதே அனேன இதி) எதனால் அறியப்படுகின்றதோ அது' என்பது அர்த்தமாகும். இந்தத் தத்துவஞானத்தினாலேயே மனம் நசிக்கவேண்டுமென்று சுருதிகள் சொல்வதாக மேலே எடுத்துக் காட்டினோம். மனோநாசத்தினால் வரும் நற்பயனை விவரிக்குமிடத்து,

[illegible]
[illegible] ॥

ததஸ்துதம் பச்யதி த்யாயமாந:
அத்யாத்ம யோகாதிகமேன தேவம் மத்வா

என்று சுருதிகள் சொல்லுகின்றன. அஃதாவது, "இவ்விதமாகத் தத்துவஞானமடைந்து அதனால் மனத்தை நசிக்கச்செய்து கொண்டு (விருப்பு வெறுப்பு முதலிய விருத்திகளில்லாமற் செய்து கொண்டு) பரிசுத்தமான பரமாத்மாவைத் தியானித்துக்கொண்டிருப்பவனுக்கு அந்தப் பரமாத்ம தரிசனம் கிடைக்கும்; ஞானயோக நிஷ்டையை அனுசரிப்பதனால் அப்படிப்பட்ட புண்ணியன் ஸ்வப்பிரகாசமாக உள்ள பரப் பிரம்மத்தைத் தெரிந்துகொள்கிறான்." அஃதாவது, அவன் சோகமோகங்களில்லாதவனாகிறான் (விசனம் சந்தோஷம் எனுமிரண்டும் அவனுக்கு இலவாகின்றன); நிர்விகற்பக சமாதிநிஷ்டையினால் அடையக்கூடிய ஆத்மாவை அவன் அடைகிறான். இதுவே சுருதிகளின் தாற்பரியமாம்.

[மேலே விவரித்த மனோநாசம் வாசனக்ஷயம் என்பவற்றின் காரண காரியங்களையும், அவற்றிற்கு எதிரிடையான மனோ விருத்தி முதலியவற்றின் தீப்பயன்களையும் எளிதில் தெரிந்துகொள்ளுமாறு, அவை உண்டாகும் கிரமப்படி ஒன்றன்பின் ஒன்றாக அவைகளை வைத்து ஓர் அட்டவணை தொகுப்பாம். இவ் வரிசைகளிற் கீழிருப்பது அதற்கு முன் உள்ளதன் பயனாகும்:—

| | |
|---|---|
| அஸுரவாஸனை | தெய்வவாஸனை |
| \| | \| |
| டம்பம் முதலிய துர்க்குணங்கள் | சுத்த ஸத்வ குணங்கள் |
| \| | \| |
| அபிமானம் | அபிமானமின்மை |
| \| | \| |
| அஜ்ஞானம் | தத்துவஞானம் |
| \| | \| |
| மனோவியாபாரங்களினாற் சஞ்சலம் | வாஸனக்ஷயம், மனோநாசம் |
| | \| |

| | |
|---|---|
| | நிதித்தியாஸம் (தியானம்) |
| புண்ணிய பாபகர்மங்களை ச்செய்தல் | ஞானயோகம் |
| அவற்றின் பயன்களையனுபவித்தல் | ஆத்மாவலோகனம் (ஆத்மாவைக்காண்பது) |
| பிறப்பும் இறப்பும் அமைந்த சமுசாரச் சக்கரம் | சுக துக்கங்களற்ற பரமானந்தமான பரமபதம் |

மேலே குறிக்கப்பட்ட லக்ஷணங்களுள் யாதேனுமொன்று கைகூடின், அதன் வரிசையிலுள்ள மற்ற லக்ஷணங்கள் தமக்குத் தாமே கைகூடும். பந்தத்திற்குக் காரணம் அஸுரவாஸனை; மோக்ஷத்திற்குக் காரணம் தெய்வவாஸனை].

இந்தக் கருத்தினையே ஸ்மிருதிகளும் எடுத்துரைக்கின்றன. வாஸனாக்ஷயம் ஆனாலன்றித் தத்துவஞானம் சித்தியாதென்பது ஆரியமத சித்தாந்தமாகும். ஸ்மிருதி வசனம்:—

𑌯𑌂 𑌵𑌿𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌃 𑌜𑌿𑌤𑌶𑍍𑌵𑌾𑌸𑌾𑌃 𑌸𑌂𑌯𑌤𑍍𑌤𑌾𑌸𑍍𑌸𑌂𑌯𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌃
𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌃 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌯𑍁𑌂𑌜𑌾𑌨𑌾𑌃 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌯𑍋𑌗𑌾𑌤𑍍𑌮𑌨𑍇 𑌨𑌮𑌃

யம் விநித்ரா: ஜிதச்வாஸா: ஸம்யத்தா ஸ்ஸம்யதேந்த்ரியா:
ஜ்யோதி: பச்யந்தி யும்ஜானா: தஸ்மை யோகாத்மனே நம:

"தூக்கமில்லாதவர்களும் (உறங்காதவர்களும்), பிராணஜயமடைந்தவர்களும் (சுவாஸத்தைக் கட்டிய்வர்களும்), ஜிதேந்திரியர்களும் (புலன்கள் இழுக்கும் வழியிற்செல்லாது அவற்றையடக்கியாளுந் திறனுடையவர்களும்) எந்தச் சோதிவடிவத்தைக் காண்கின்றார்களோ அப்படிப்பட்ட (அந்த) ஆத்மாவுக்கு நமஸ்காரம்."

இவ்வாறாக, தத்துவஞானம் உண்டாவதற்குக்காரணம் வாஸனாநாசமேயென்று ஆசாரியர் வற்புறுத்திப் பின்னர் அப்படி வாஸனாநாசமடைந்த நிலைமையைப்பற்றிச் சொல்லுகின்றார்.

[வாஸனையென்பது கர்மவாஸனையாகும். பூர்வத்திற் செய்த கர்மங்களின் வாஸனையே இப்போழ்து செய்யுங் கருமங்களுக்குக்

காரணமாகும். ஆகவே, வாசனு நாசமாவது கர்மநாசமெனத்தகும். மனிதர் ஜன்மமெடுத்து அனுபவிக்கத்தக்க கர்மங்கள் ஆகாமி, ஸஞ்சிதம், பிராரப்தம் என மூன்றுவகையாம். ஆகாமிக் கர்மமாவது நாம் இப்போழ்து செய்யுங் கர்மங்களின் பயன்; இதனை இனி நாம் ஜன்மமெடுத்து அனுபவிக்கவேண்டும்; இது ஸஞ்சித கர்மத்துடன் போய்ச்சேர்ந்திருக்கும்; ஸஞ்சிதகர்மமாவது முன்ஜன்மங்களிற் செய்த கர்மப் பயன்களின் தொகுதி; இதினின்று ஒவ்வொரு பகுதியை ஒவ்வொரு ஜன்மத்தில் இனி நாம் அநுபவிக்கவேண்டும். பிராரப்த கர்மமாவது மேற்சொன்ன ஸஞ்சித கர்மத்தினின்று இந்த ஜன்மத்தில் நாம் அனுபவிப்பதற்காகப் பகுத்துவிடப்பட்ட கர்மமாகும்; இதனை நாம் அனுபவித்தே தீரவேண்டும்; எவ்வாற்றானும் இதினின்று தப்பித்துக் கொள்வது முடியாது; இஃது எவரையும் விடாது.

[நாம் முன் ஜன்மங்களிற் செய்த கர்மங்களின் பயன் ஒரு வைக்கோற்போரைப் போற் குவிந்திருக்கின்றது. இது ஸஞ்சிதம். இதினின்று ஒரு பகுதியையெடுத்து இந்த ஜன்மத்தில் நாம் அனுபவிக்கும்படி வாய்த்திருப்பது பிராரப்தம். இனி நாம் ஜன்மமெடுத்து அனுபவிக்கவேண்டி மிகுதியாக இருப்பது ஆகாமியம்; இதனுடன் இந்த ஜன்மத்தில் நாம் செய்யுங் கருமங்களுங் கூடிச் சஞ்சிதத்தை அதிகரிக்கின்றன.]

[இந்தக் கர்மப் பயன்கள் நல்லவை தீயவையென இருவகையினவாம். இவையே புண்ணியபாபங்களெனப்படுவன. நாம் செய்த புண்ணியங்களையும் பாபங்களையுங் கூட நாம் அனுபவிக்கவேண்டும்; பாபங்களை மாத்திரமேயன்று. தேகம் இந்திரியங்கள் ஆகிய இவைகளின் வியாபாரங்களினல் மேற்சொல்லிய புண்ணிய பாப கர்மங்கள் ஏற்படுகின்றன. இந்தப் புண்ணிய பாப கர்மங்களே ஆகாமி, ஸஞ்சிதம், பிராரப்தம் எனும் மூவகைக் கர்மங்களாகத் திரிகின்றன].

இம் மூன்றுவிதக் கர்மங்களும் எல்லா மனிதர்களுக்கும் உளவெனினும், ஞானியானவன் ஸ்வப்பிரகாசமாகவும், ஞானஸ்வரூபமாகவும் உள்ள பிரம்மாக்கினியில் ஆகாமி சஞ்சிதம் எனும் இரு

வகைக் கர்மங்களையும் சுட்டுப் பொசுக்கிவிடுகின்றான். பூர்ணஞானம் பெற்றவன் தானே பிரம்ம ஸ்வரூபமாக விளங்குவதனால் அவனுக்குத் தன்னைவிட வேறு வஸ்து இல்லை. அவன் இனிப் புதிதாகக் கருமஞ்செய்து ஆகாமி சஞ்சிதங்களை அபிவிருத்தி செய்கிறவனல்லன்; ஸஞ்சிதத்தை யனுபவிக்க இனி ஜன்மமெடுப்பவனுமல்லன்; ஆதலின், அவனுக்கு ஆகாமி ஸஞ்சிதங்களிரண்டும் நசிக்கின்றன.

𑌨𑌾𑌭𑍁𑌕𑍍𑌤𑌂 𑌕𑍍𑌷𑍀𑌯𑌤𑍇 𑌕𑌰𑍍𑌮 𑌕𑌲𑍍𑌪𑌕𑍋𑌟𑌿 𑌶𑌤𑍈𑌰𑌪𑌿

நாபுக்தம் க்ஷீய்யதே கர்ம கல்பகோடி சதைரபி

என்னும் பிரமாணத்தினால், பாபமானது அனுபவியாமல் தீராது என்னும் சாஸ்திர சித்தாந்தமிருக்கின்றமையின், ஞானிக்குக் கூடப் பாப சம்பந்தம் இருக்கின்றதென்று ஆக்ஷேபிக்கலாமோ எனின், அது தகாது. பிரம்மஞானிக்குப் பாபகர்ம சம்பந்தம் இருக்கின்றதோ எனும் சந்தேகமே பிறப்பதற்கிடமில்லை. என்னையெனின், “(பூர்வத்தில்) முன்னர்ச் செய்தவனுமல்லன், இப்பொழுது செய்பவனுமல்லன், இனிச் செய்யப்போகிறவனுமல்லன்” என்று இவ்வாறாக இறந்தகால நிகழ்கால வருங்காலங்களிலும் (பூத பவிஷ்யத்வர்த்தமான காலங்களிலும்) அவன் கர்த்திருத்துவத்தை மேற்கொள்ளாமல். தானே பிரம்ம ஸ்வரூபனென்று எப்பொழுதும் பாவிக்கின்றான். ஆதலால், பிரம்மநிஷ்டனுக்குப் பாப சம்பந்தம் உளதென்று மூடனுஞ் சொல்லான்.

அன்றியும், பிரம்ம ஸாக்ஷாத்காரம் ஆகுமுன்னர்ச் செய்த பாபமானது (ஸஞ்சிதகர்ம) பிரம்மஞான மடைந்தவுடனே நசித்துப் போகின்றதெனச் சுருதிகள் சொல்லுகின்றன:—

𑌏𑌵𑌂 𑌵𑌿𑌦𑌿 𑌪𑌾𑌪𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌨 𑌶𑍍𑌲𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 [𑌯𑌥𑍈
𑌤𑌦𑍍𑌯𑌥𑍇𑌷𑍀𑌕𑌾 𑌏𑌵𑌂 𑌹𑌾𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌪𑌾𑌪𑍍𑌮𑌾𑌨𑌃 𑌪𑍍𑌰𑌦𑍂𑌯𑌨𑍍𑌤𑍇

ஏவம் விதி பாபம் கர்ம நச்லிஷ்யதே
த்த்யதேஷீகா ஏவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மானः ப்ரதூயந்தே

ஆகையால், "நாபுக்தம் க்ஷீயதே கர்ம" என்னும் சாஸ்திர சித்தாந்தமானது பிரம்மஞானிகளல்லாத மற்றவர்களுக்குச் சொன்னதேயொழிய, பிரம்மஞானிகளுக்கு அன்று.

ஆசாரியர் சொல்லிய இந்த மூன்றாவது சுலோகத்தில் "துஷ்கிருதம்" என்று மாத்திரம் குறிக்கப்பட்டிருக்கிறது. 'துஷ்கிருதம்'—பாபம். இங்குப் பாபத்தை மாத்திரம் பிரம்மாக்கினியினால் எரிக்கின்றவனென்று சொல்ல வந்ததன்று. பாபமெல்லாம் நசித்துப் புண்ணியம் மிகுந்திருந்தாலும் அதனை யனுபவிப்பதற்காக மறுபடி ஜன்மமெடுக்கவேண்டும். பாபபுண்ணியங்களிரண்டையும் நசிக்கச்செய்தவனே பிரம்மஞானியாவன். ஆதலின், சுலோகத்திற்சொல்லிய "துஷ்கிருதம்" என்னும் பதம் பாபத்தை மாத்திரமேயல்லாது "ஸுகிருதம்" என்னும் புண்ணியத்தையுங் கூடக் குறிக்கின்றது. இங்ஙனம் குறிப்பது "லக்ஷணாவிருத்தி" எனப்படும்.

பிரம்மஞானமடைந்தவனுக்கு ஆகாமி சஞ்சிதங்களென்னும் இருவகைக் கர்மங்கள் நசிக்கின்றனவென்றும், பிராரப்தம் மாத்திரம் நசிப்பதில்லையென்றும், அதனை அவன் அனுபவித்தே தீரவேண்டுமென்றும் சொன்னோம். பிராரப்த கர்மத்தின் பயனான பாபபுண்ணியங்களை யனுபவிக்குமாறு ஞானியானவன் தன்தேகத்தை அர்ப்பணை செய்துவிடுகின்றான். பிராரப்தத்தை அனுபவிப்பதற்காகவே இந்தச் சரீரம் வந்திருக்கின்றதாதலின், அதற்கு இந்த ஜன்மத்திற் பிராரப்த வசமாக நேரும் சுக துக்கங்களைச் சோக மோகங்களின்றித் தேகத்திற்கே உரியனவாக்குகின்றான்; தான் தேகத்தினின்றும் வேறான ஆத்மவஸ்து, பிராரப்தகர்மப் பயன்களான சுக துக்கங்களை அனுபவிப்பதற்கென வந்திருக்கும் தேகம் அவைகளை அனுபவித்து ஒழிக்கின்றது, அவை தன்னைச் சார்ந்தவையல்ல, தனக்கும் அந்தச் சுகதுக்கங்களுக்கும் சம்பந்தமில்லையென அவன் ஒதுங்கி நிற்கின்றான். ஆகவே; ஞானமடைந்தவனாயினும் அவன் தன் தேகம் நசிக்குமளவும் பிராரப்தத்தை அனுபவிக்கிறான். பிராரப்த கர்மமனைத்தையும் அனுபவித்தாய்விட்டது என்பதற்கு அடையாளம் அதற்கென வந்திருக்கும் தேகம் நசிப்பதேயாம். பிராரப்த கர்மானுபவம் முடிந்த பின்னர் இந்தத்தேகம் அரை க்ஷணமும் நில்லாது.

இவ்வாறு பிராரப்தமானது ஞானியையும் விடுவதில்லை, தேக முள்ளவரையில் அதனை அனுபவிக்கவேண்டும், பிராரப்தம் முடிந் தவுடன் தேகம் நசிக்கும், தேகம் நசிப்பது பிராரப்த முடிவினு க்கு அடையாளம், ஞானம் உதயமானதனுல் பிராரப்தம் நசிப்ப தில்லை—என்று சுருதிகள் (வேதங்கள்) சொல்லுகின்றன; ஞானி களின் அனுபவத்தினுலும் இஃது உண்மையென்பது ஏற்படுகின் றது; மானிடயுக்தியும் இதற்கு ஒத்திருக்கின்றது:—

வேதவாக்கியம்:— 𑌤𑌸𑍍𑌯 𑌤𑌾𑌵𑌦𑍇𑌵 𑌚𑌿𑌰𑌂 𑌯𑌾𑌵𑌨𑍍𑌨 𑌵𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 ॥

தஸ்யதாவதேவ சிரம் யாவந்நவிமோக்ஷ்யே

அனுபவம்.—மேலே உதகரித்த சுருதியினுல் ஞானிகளுக்குத் தேகம் நசிக்கும் வரையில் சமுசாரமுளதென்று ஒப்புக்கொள்ளப்பட்டது போலவே ஞானிகளி னுடைய அனுபவமும் இருக்கின்றது.

யுக்தி.—ஒரு வில்லினின்றும் விடுபட்ட அம்பு சுதந்திரமாக (தனக்குத் தானே) செல்வதுபோலக் காண ப்படுகின்றது; வில்லினுல் அதற்குக் கொடுக்கப் பட்ட வேகம் குறைந்தவுடனே அது தானுக வே விழுந்துவிடுகின்றது. பிராரப்த கருமப்பய னும் அப்படியே யாகும். குயவன் சுற்றும் சக்கர த்தையும் இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

இவ்வாருகப் பிரம்மஞானம் பிராரப்தத்தைப் போக்காதென்பது திண்ணம். ஆகலின் பிரம்மஞானமடைந்தவனும் பிராரப்தத்தை யனுபவித்தே தீரவேண்டும்; அது தப்பாது. ஆனுல், மற்றவர்கள் பிராரப்தத்தை யனுபவிப்பதற்கும் அவன் அனுபவிப்பதற்கும் மிக்க வித்தியாசமுண்டு. இந்த ஜன்மத்தில் நமக்கு வந்தெய்தும் சுக துக் கங்களை நாம் சோகமோகங்களுடன் மேற்கொண்டு மனோவிகார முற்று அனுபவிக்கின்ருேம். இங்ஙனம் மனங்கொண்டு அனுபவி ப்பது நாம் செய்யும் துஷ்கர்மமாகின்றது, இதன் பயன்களுக்கு நாம் கட்டுப்படுகின்ருேம்; அஃதாவது, அப் பயன்களை அனுபவிக் குமாறு நாம் மறுபடி ஜன்மமெடுக்கவேண்டும். இவ்விதமாக ஞான

மில்லாமல், பிராரப்த கர்மத்தின் உண்மையறியாமல், உழலுவத ஞற் பின்னும் பிறவிக்குள்ளாகிச் சமுசார சக்கரத்தி லகப்பட்டு வருந்துகின்றோம். ஞானியோவெனின், அவனும் பிராரப்தத்தை யனுபவித்தபோதிலும், அவன் அதனுல் வரும் சுக துக்கங்களை மேற்கொள்ளான். அவை வந்தெய்தும்பொழுது அவன் தன் தேக த்தை அவைகளுக்கு ஒப்புவித்துத் தான் வேருகிச் சாக்ஷியாக நின்று அனுபவிக்கின்ருன். அஃதாவது, அந்தச் சுகதுக்கங்களி ஞல் அவன் சோகமோகங்களெய்துகின்ருனல்லன். ஒரு துணியை த்தீயிலிட்டுக் கொளுத்திவிட்ட பிறகு அந்தத் துணியின் வடிவம் மாத்திரம் அங்ஙனமே இருக்கினும், அது பார்வைக்குத் துணி யெனவே தோற்றினும், உண்மையில் அதனிடத்துக்கொளுத்தப் படாத துணிக்குரிய தன்மையான வலிவு முதலியன இல்லை; அது போல, ஞானியின் தேகமானது கொளுத்தப்பட்ட துணியின் நிலைமையிலும் நமது தேகங் கொளுத்தப்படாத துணியின் நிலை மையிலும் இருக்கின்றது. இப்படித் தனது தேகத்தைப் பிராரப்த கர்மத்திற்கு ஒப்புவித்திருக்கும் ஞானியானவன் குருஸ்வரூபனெ ன்பதே தமது அபிப்பிராயம் என்று ஸ்ரீ சங்கராசாரியர் சொல் லுகின்ருர்.

பீடிகை

ஸ்ரீ ஆசாரியஸ்வாமிகள் இந்த "மனீஷாபஞ்சக" த்தின் முத லாவது சுலோகத்தினுல் "பிரம்மைவாஹமஸ்மி" என்னும் மஹா வாக்கியோபதேசஞ் செய்தார்; இரண்டாவது சுலோகத்தில் "ஆத்ம ஸத்தியம் ஜகத்து மித்தியை" என்னும் உண்மையைப்போதித்தார்; மூன்ருவது சுலோகத்தில், முதலிரண்டு சுலோகங்களிலும் போதி த்த உண்மைகளை மனமார உணர்ந்தறிந்து அனுபவஞானம் பெற் றவிடத்து, உலகத்தில் எங்ஙனம் விவகரிக்கவேண்டுமென்பதைக் காட்டிக்கொடுத்தார். மேற்சொல்லியவாறு ஜீவாத்மாவும் பரமா த்மாவும் ஒன்று, ஆத்மாவைத் தவிர பிறிதொரு வஸ்துவுமில்லை யென்று சாதிப்பதற்குச் சில ஆக்ஷேபங்களைச் சொல்லி, அவற் றிற்குச் சமாதானமும் கூறுகின்ருர்:—

முதலாம் ஆக்ஷேபம்:—"நான் ஸ்தூலமாக இருப்பவன்," "நான் மூடவன்," "நான் செவிடன்" என்று சொல்லுமிடத்து "நான்"

என்னும் பதம் ஆத்மாவைக் குறிக்கின்றதன்றோ? இங்கு ஜீவாத்மா என்பது "நான்" என்பதாகும்; அஃதாவது, அந்த "நான்" தேகம் இந்திரியங்கள் முதலியவைகளைப்போலிருக்கிறது. இப்படித் தேகேந்திரியாதிகளைப் போலத்தோற்றுகிற ஜீவாத்மாவானது பிரம்மத்தின் தன்மை வாய்ந்ததாகுமோ?

சமாதானம்:— "இது எனது சரீரம்," "இது எனது கண்," "இது எனது செவி," "இது எனது பிராணன்," "இது என் மனம்," "இது என் புத்தி," "இது நான்" என்று இவ்வாறாகத் தேகேந்திரியாதிகளை "இது," "இது" என்று வேறு வேறு பதார்த்தங்களாக எண்ணி விவகரிப்பது ஒவ்வொருவருடைய அனுபவத்திலும் இருக்கின்றது. "இது எனது சரீரம்" என்னுமிடத்து "இது" என்பது சரீரத்தைக் குறிக்கின்றது; "எனது" என்பது ஆத்மாவைக் குறிக்கின்றது. "இது எனது புத்தகம்" என்னும்போது தன்னைவிட வேறுபதார்த்தமாகப் புத்தகம் இருப்பது போல, "இது எனது சரீரம்" என்பதில் "யான்" என்னும் ஆத்மவஸ்து வேறு என்று தெளிவாகின்றது. இப்படி "இது," என்று குறிப்பிட்டுச் சொல்வதனால் தேகேந்திரியாதிகள் ஆத்மாவைவிட வேறான பதார்த்தங்களாக எண்ணப்படுகின்றன. ஆத்மாவோவெனின், "யான்" என்று சொல்லிக்கொள்ளும்பொழுது அந்த "யான்" என்னும் ஆத்மாவானது தேகம், இந்திரியங்கள், மனம், புத்தி முதலானவைகளை விட வேறானதொரு வஸ்துவென்று தேவர், மனிதர் முதலான சகலப்பிராணிகளும் தத்தம் மனத்தில் நினைக்கிறார்கள். "யான்" என்னும் ஆத்மவஸ்து வேறு, தேகம், இந்திரியங்கள் முதலியன வேறு என்பது ஒவ்வொருவருடைய மனத்திலும் தவறாமல் உள்ளூறத் தோற்றுகின்றது. குடம் முதலான பௌதிக பதார்த்தங்களை "இது," "அது" என்று நாம் வழங்குவதனால் எப்படி அவை ஆத்மாவுக்கு வேறானவையென்று தெரிந்து கொள்ளுகிறோமோ, அப்படியே தேகேந்திரியாதிகளையும் நாம் "இது," "இது" என்று வேறு பதார்த்தங்களாக வழங்குகின்றோமென்பது மேற்சொல்லிய வாக்கியங்களினால் ஏற்படுகின்றது. ஆதலின், குடம் முதலியவற்றைப்போல தேகேந்திரியாதிகளும் ஆத்மாவல்லாதன என்பது தெளிவு; "யான்" என வழங்கப்

பெறும் ஆத்மாவானது ஸச்சிதானந்த ஸ்வரூபமான பிரம்மமே என்பது திண்ணம். "இது" என வழங்கப்பெறும் தேசேந்திரியாதிகள் "யான்" அல்லாத அநாத்மாக்கள் என்பதும் திண்ணம்.

இரண்டாம் ஆக்ஷேபம்:—தேகேந்திரியங்களல்லாத "யான்" என்னும் ஆத்மாவுக்கு மாத்திரம் ஸச்சிதானந்த ஸ்வரூபம் சொன்னோம். ஆனால், "யான் மனிதன்" என விவகரிக்குமிடத்து, மனிதனை "யான்" என்பது கருத்தன்றே? இங்கு ஸச்சிதானந்தத்துவம் மனிதனுக்கும் "யான்" என்னும் ஆத்மாவுக்கும் ஆகிய இரண்டிற்கும் பொதுவாயிற்று. மனுஷ்யத்துவமோவெனின், அது தேக சம்பந்தமான தருமம்; அஃதாவது, தேக சம்பந்தமான "யான்" என்பது பொருள். அப்படிப்பட்ட தேக சம்பந்தமான "யான்" என்னும் ஆத்மாவுக்கு ஸச்சிதானந்த ஸ்வரூபத்துவஞ் சொல்லியதாயிற்று. ஆனால், இதற்கு முன்வாக்கியத்தில் தேகேந்திரியங்களல்லாத "யான்" என்னும் ஆத்மாவுக்கு மாத்திரம் பிரம்மத்துவம் சொல்லப்பட்டது. இப்பொழுது "யான் மனிதன்" என்னும் வாக்கியத்தினால் தேக சம்பந்தமான "யான்" என்னும் ஆத்மாவுக்குப் பிரம்மத்துவம் (அஃதாவது, ஸச்சிதானந்த ஸ்வரூபத்துவம்) சொல்லுகின்றமையின், முன்பின் விரோதம் ஏற்படுகின்றது.

சமாதானம்:—ஆயினும், இனிச் சொல்லப்படும் காரணங்களினால் இந்த முன்பின் விரோதமில்லாமற்போம்.

சரீரம் முதலியன பிரம்ம சைதன்னியத்தின் சகாயத்தினால் பிரகாசிக்கின்றவைகளேயல்லாமல், சுவயமாக (தமக்குத்தாமாக) ப்பிரகாசிப்பவைகளல்ல. இதனால், சரீராதிகள் ஆத்மாவை விட வேறானவை யென்று தெரியலாகும். அப்படிப்பட்ட சரீரங்களில் "நான்" என்னும் ஆத்மபாவம் உண்டாவது,—செம்பரத்தம்பூவுக்குச்சமீபத்தில் வைக்கப்பட்ட ஸ்படிகமணியிற் சிவப்புத்தோற்றுவது போன்ற—பிரமை மாத்திரமேயல்லாது உண்மையன்று. இங்கே ஒரு வஸ்து இல்லாதிருக்க அஃது இருப்பதுபோலக் காணப்பட்டது. இப்படி, இல்லாத வஸ்துவொன்று இருப்பதாகக் காணப்

படுவது 'அத்தியாஸம்' எனப்படும் என்று ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் தம் சூத்திரபாஷியத்தில் உதகரித்திருக்கின்றார்கள்.

மூன்றும் ஆக்ஷேபம்:— "நான்" என்னுமிடத்து, அந்தப் பதம் ஆத்மாவை மாத்திரம் குறிக்குமேயன்றித் தேகேந்திரியாதிகளைச் சாராது என்பது மேற்கண்ட ஆக்ஷேப சமாதானங்களினுல் வெளிப்போந்த விஷயமாகும். ஆனுல், "ஆத்மா" எனப்படுவது "நான்" என்னும் ஞானத்தினுல் தெரியத்தக்கது என்று சொல்லப்படுகிறதன்றே? அஃது உண்மையாயின், ஆத்மாவுக்கு ஸ்வப்பிரகாசத்துவம் (தனக்குத் தானுகப் பிரகாசிக்குந்தன்மை) இல்லையென்றும், "நான்" என்னும் ஞானத்தின் பிரகாசத்தினுல் அது தெரியப்படுகிறதென்றும் சொல்லியதுபோலாயிற்று. இப்படிச் சொல்வது, ஆத்மா ஸ்வப்பிரகாசமானது என்று முறையிடும் சுருதிகளுக்கு விரோதமாகக் காணப்படுகிறது.

சமாதானம்:— ஆனுல், இந்த ஆக்ஷேபணம் நிலைக்கமாட்டாது. எப்படியெனில், நமக்குள் இருக்கும் அந்தக்கரணமானது இந்திரியங்களின் வழியாக வெளிப்போந்து, வெளியிலுள்ள வஸ்துக்களின் மீது பட்டு அவைகளின் பிரதிபிம்பங்களைத் தனக்குள் ஆரோபித்துக்கொள்ளுகிறது (ஏற்றுக்கொள்ளுகிறது). அஃதாவது, வெளியிலுள்ள வஸ்துக்கள் அந்தக்கரணத்திற் பிரதிபலிக்கின்றன. நமது முகத்தைக் காட்டும் கண்ணுடியிற் பிரகாசத்துவமில்லாவிடின், பிரதிபிம்பத்தைக் கிரகிக்கும் சக்தி அந்தக் கண்ணுடிக்கு உண்டாகாது; நமது முகமும் அதனிற் காணப்பெருது. இந்த உவமானத்தைக் கொண்டு, அந்தக்கரணத்திற்குப் பிரகாசத்துவமில்லாவிடின் வெளியிலுள்ள வஸ்துக்களை அது கிரகிக்கமுடியாது என்பது தெளிவுற விளங்கும்.

நம்முடைய பிரத்தியக்ஷமான அனுபவத்தில் அந்தக்கரணமானது வெளியிலுள்ள வஸ்துக்களின் பிரதிபிம்பத்தைக் கிரகிக்கின்றது என்பது நமக்குத் தெரிகின்றது. ஆதலால், அதற்குப்பிரகாசத்துவம் இருக்கின்றதென்பது நமக்கு நிச்சயமாகின்றது. அதற்கு

அந்தப் பிரகாசத்துவம் இயற்கையில் உள்ளதன்று; அஃது ஆத்ம சம்பந்தத்தினுல் அதற்கு உண்டாகியது என்பதற்கு வித்துவான் களின் (ஞானிகளின்) அனுபவமிருக்கின்றது. ஆகையால் ஆத்ம சைதன்னியமே அந்தக்காணத்திற் பிரகாசிக்கின்றது. அந்த அந்தக் கரணத்தையே இதுவரையில் "நான்" என வ்வகரித்துவந்தோம். 'அந்தக்கரணம்' என்று சொல்லாமல் 'நான்' என்பதே ஆத்மா என்று சொன்னேம். அந்தக்கரணத்தை ஆத்மா என்று சொல்வது மந்தாதிகாரிகளையுத்தேசித்துச் சொல்லியதாகக்கொள்ளத்தக்கது. சீடனுக்குக் குரு பிரம்மோபதேசம் செய்யுங்கால் அவனைப் படிப்படியாக மேலே கொண்டுபோகக் கருதி முதலில் அன்னமே பிரம்மம் என்றும், பிறகு பிராணமே பிரம்மம் என்றும்,—இவ்வாறாக ஒவ்வொன்றைப் போதித்துப் பின்னர் அந்தக்கொள்கையை மாற்றி மேலேயுள்ள படியைக் காட்டிப் போதிப்பது குருபதேசக்கிரமமாக இருக்கின்றது. அந்தக் கிரமத்தை யனுசரித்தே இங்கேயும் "நான்" என்று சொல்லப்படும் அந்தக்கரணத்தையே பிரம்மமென்று முதலில் ஸ்தாபித்தார். "நான்" எனத்தெரிந்துகொள்ளத்தக்க ஆத்மாவுக்கு ஸ்வப்பிரகாசத்துவமில்லாமற்போகின்றதேயென்று சீடன் ஆக்ஷேபிக்கவே, அங்கே ஆத்மா என்று சொல்லப்பட்டது அந்தக்கரணமே என்றும், "நான்" என்னும் அறிவு அவ்வந்தக்கரணத்திற்கே உண்டென்றும், "நான்" என்னும் அறிவினுல் பிரம்மத்தைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்றால் அந்தக்கரணத்தினுல் ஆத்மாவைத் தெரியவேண்டுமென்பதே பொருளென்றும், அவ்வந்தக்கரணத்திற் காணப்படுகிற பிரகாசத்துவத்திற்குக்காரணம் யாதெனின் அஃது அதற்குச் சாட்சிபூதமாக இருக்கும் ஆத்மா என்றும், அந்த ஆத்மாவை "நான்" என்னும் அறிவுள்ள அந்தக்கரணத்தைக் கொண்டே தெரிந்துகொள்ளவேண்டுமென்றும் குரு போதிக்கின்றார்.

நான்காம் ஆக்ஷேபம்: — ஆத்மாவானது தனக்குத்தானாகவே பிரகாசிக்குந் தன்மையது எனக்கூறுமிடத்து, அவ்வாத்மாவைத் தெரிந்துகொள்வதற்கு "நான்" என்னும் அந்தக்கரணத்தின் சகாயம் வேண்டுவதேன்?

சமாதானம்:— ஆத்மாவை அஞ்ஞானம் என்னும் ஆவரணம் மூடிக்கொண்டிருக்கின்றது. ஆத்மாவைத் தெரிந்துகொள்வதற்கு அந்த அஞ்ஞானவரணம் நாசமாகவேண்டும். அதனிமித்தம் "நான்" என்னும் பாவம் அவசியமாகும். எப்படியெனின்,—

| (1) | (2) | (3) |
|---|---|---|
| அந்தக்கரணத்திற்குப் பிரகாசத்தைக்கொடுக்கும் சைதன்னியம் | அஞ்ஞானவரணம் | ஸ்வப்பிரகாச பிரம்மசைதன்னியம் |

இந்த விபாகத்தில் (1) முதலாவதும் (3) மூன்ருவதும் ஒரே தன்மையனவாகும். ஆனால், அவையிரண்டும் ஒன்றேயெனத்தோற்ருதவாறு (2) இரண்டாவதான அஞ்ஞானவரணம் ஒரு திரையேபோன்று குறுக்கீக நிற்கின்றது. ஆகையால், (1) முதலாம் நிலைமையிலிருக்கும்பொழுதே (3) மூன்ருவதான பிரம்மசைதன்னியமே "நான்" என்னும் திடமான ஞானம் உண்டாகுமாயின், (2) இரண்டு என்னும் அடையாளமுள்ள அஞ்ஞானவரணத்தின் செய்கையொன்றும் பலியாது போயிற்று என்பதாம். அஃதாவது, (1) வேறு, (3) வேறு என்னும் பிரமையையுண்டாக்குவது (2)ம் இரண்டு என்னும் அடையாளமுள்ளதன் காரியமாகும். இந்தக்காரியம் (1) ஆம் நிலைமையில் "நான்" (3) மூன்ருவதே (ஸ்வப்பிரகாசபிரம்ம சைதன்னியமே) என்னும் உறுதியான ஞானமுள்ளவன் மீது பயன்படாது. முக்கியமான தாற்பரியம் யாதெனின், (1) ஸ்திதியிலிருப்பவன் (3) அடையாளமுள்ள ஆத்மா நானேயென்று எப்பொழுது திடமாகத் தெரிந்துகொள்கிருனே, அப்பொழுது அவன் அஞ்ஞானமெனும் மாயையைக்கடந்து ஆத்ம ஸாக்ஷாத்காரமடைகிருன். ஆகையால், அஞ்ஞானவரணம் நாசமாவதற்கு "நான்" என்று சொல்லப்பெறும் அந்தக்கரணவிருத்தி அவசியமாகும்.

மேலே குறிக்கப்பட்ட அந்தக்கரண விருத்தியாகிய நானென்னும் பாவமானது பிரம்மத்திற்கு ஆவரணமாகிய அஞ்ஞானம் நசிப்பதற்கு அவசியமாக இருக்கிறதென்றும், அஞ்ஞான நாசமே

பிரம்மஸ்வரூபமென்றும் பூர்வீகர்களான ஆரியர்களும் சொல்லி யிருக்கிறார்கள். ஆதலால், பிரத்தியகாத்மாவே பிரம்மம் என்று சொல்வதில் தோஷமில்லையென நிச்சயித்து இனி வரும் சுலோகத்தைச் சொல்லுகின்றார்:—

𑌯𑌾 𑌤𑌿𑌰𑍍𑌯𑌙𑍍𑌨𑌰𑌦𑍇𑌵𑌤𑌾𑌭𑌿 𑌰𑌹𑌮𑌿 𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌃 𑌸𑍍𑌫𑍁𑌟𑌾 𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇,
𑌯𑌦𑍍𑌭𑌾𑌸𑌾 𑌹𑍃𑌦𑌯𑌾𑌕𑍍𑌷𑌦𑍇𑌹𑌵𑌿𑌷𑌯𑌾 𑌭𑌾𑌨𑍍𑌤𑌿 𑌸𑍍𑌵𑌤𑍋 𑌚𑍇𑌤𑌨𑌾𑌃 ।
𑌤𑌾𑌂 𑌭𑌾𑌸𑍍𑌯𑍈𑌃 𑌪𑌿𑌹𑌿𑌤𑌾𑌰𑍍𑌕𑌮𑌣𑍍𑌡𑌲𑌨𑌿𑌭𑌾𑌂 𑌸𑍍𑌫𑍂𑌰𑍍𑌤𑌿𑌂 𑌸𑌦𑌾 𑌭𑌾
𑌵𑌯𑌨𑍍, 𑌯𑍋𑌗𑍀 𑌨𑌿𑌰𑍍𑌵𑍃𑌤𑌮𑌾𑌨𑌸𑍋 𑌹𑌿 𑌗𑍁𑌰𑍁 𑌰𑌿𑌤𑍍𑌯𑍇𑌷𑌾 𑌮𑌨𑍀
𑌷𑌾 𑌮𑌮 ॥ ௪ ॥

யா தீர்யங்நரதேவதாபி ரஹமி த்யந்தஃ ஸ்புடா க்ருஹ்யதே
யத்பாஸா ஹ்ருதயாக்ஷதேஹவிஷயா பாந்தி ஸ்வதோ சேதநா:
தாம் பாஸ்யைஃ பிஹிதார்க்கமண்டலநிபாம் ஸ்பூர்த்திம் ஸதா பாவயன்
யோகீ நிர்வ்ருதமானஸோ ஹி குரு ரி த்யேஷா மநீஷா மம

திர்யங்நரதேவதாபி:— பசுபக்ஷி மிருகங்கள் முதலியவைகளினு லும் மனிதர்கள் தேவர்கள் முதலானவர்களினுலும்

அஹம் இதி—"நான்" என்று

அந்த: யாஸ்புடாக்ருஹ்யதே—தத்தம் மனத்தில் எது தெளி வாகத் தெரியப்படுகின்றதோ

ஹ்ருதயாக்ஷதேஹ விஷயா:—உட்பொறி வெளிப்பொறிகளோடு (அந்தரிந்திரிய பஹிரிந்திரியங்களோடு) கூடிய அந்த தேக வியாபாரங்கள்

ஸ்வத: சேதனு:—தமக்குத் தாமே சொந்தமாகச் சைதன்னிய முடையவைகளைப் போல

யத்பாஸாபாந்தி— எந்தப் பிரகாசத்தினுடைய சகாயத்தினுல் விளங்குகின்றனவோ

தாம்ஸ்பூர்த்திம்— அந்தப்பிரம்ம சைதன்னியத்தை

பாஸ்யை: பிஹிதார்க்கமண்டலநிபாம்=பிரகாசமில்லாத மேகத்தினால் மூடப்பெற்ற சூரியமண்டலத்திற்குச் சமானமாக

ஸதாபாவயன்=எப்பொழுதும் பாவித்துக்கொண்டிருக்கிற யோகீ=ஞானியே

நிர்வ்ருதமானஸோஹி=சந்தோஷயுக்தமான மனமுடையவன்; ஆகையினாலேயே

குரு: இதி மம மநீஷா ஏஷா=அவனே குருவென்பது எனது அபிப்பிராயம்

"எந்த சைதன்னியமானது பசுபக்ஷி மிருகங்கள் முதலியவைகளினாலும் மனிதர் தேவர் முதலானவர்களினாலும் "நான்" என்று தத்தம் மனத்தில் தெளிவாகத்தெரிந்துகொள்ளப்படுகிறதோ; அந்த நிந்திரியபஹிரிந்திரியங்களுடன் கூடிய தேகவியாபாரங்கள் எந்தப் பிரகாசத்தைக்கொண்டு தமக்குத் தாமே சொந்தமாகச் சைதன்னியமுடையனவகளைப்போல விவகரிக்கின்றனவோ;- அந்தப்பிரம்ம சைதன்னியத்தைப் பிரகாசமில்லாத மேகத்தினால் மூடப்பெற்ற சூரியமண்டலத்திற்கொப்பாக எப்பொழுதும் பாவித்துக்கொண்டிருக்கிற ஞானியே சந்தோஷமான மனமுடையவன். ஆதலின், அவனே குருவாவன் என்பது எனது கொள்கை."

எல்லா ஜந்துக்களின் மனஸ்ஸாக்ஷியினிடத்தும் 'நான்' என்னும் பாவமாகத் தெரிந்துகொள்ளப்படுவதும், சைதன்னியரூபமாக இருந்து இந்திரிய வியாபாராதிகளை நடப்பிக்கிறதுமான ஆத்மாவைத்தானே நப்பிரகாசிக்கும் சோதிவடிவமாகப் பாவித்து அதனாலுண்டாகும் பிரம்மானந்த சுகத்தை எவன் அடைகிறானோ அவனை ஸ்ரீ சங்கராசாரியர் தமக்குக் குருவெனப்பாவிக்கின்றார்.

'திர்யங்நரதேவதாபி:'—'திர்யக்'=சாய்ந்த, குறுக்கான, வளைந்த; திர்யக்ஜந்து=சாய்வாகவுள்ள பிராணி. பிராணிகளுள் மனிதன் மாத்திரமே நேராக நிமிர்ந்து நடக்கிறவன்; மற்றப்பிராணிகளெல்லாம் சாய்வாகவே (பூமிக்குச்சமமாகவே) நடக்கும்; ஆதலின்,

மனிதனைத்தவிர மற்றப்பிராணிகளுக்கெல்லாம் திர்யக்ஜந்துக்கள் எனப்பெயராகும். சுலோகத்தில் ‘திர்யக்’ சப்தத்தினால் மனிதனல்லாத மற்றப் பிராணிகளெல்லாம், அஃதாவது, புழுக்கள், பறவைகள், பசுக்கள், மிருகங்கள் முதலியன வனைத்தும் குறிக்கப்பட்டன. அந்தப்பிராணிகளுக்கும் ‘நான்’ என்னும் ஞானம் இருக்கின்றது. அந்த ஞானத்திற்கு அந்தக்கரணவிருத்தி என்று பெயர். அப்படிப்பட்ட அந்தக்கரணவிருத்திக்குக் காரணமாக இருந்துகொண்டு, மற்றொன்றின் சகாயமில்லாமல் தனக்குத்தானாகவே எல்லாப்பூதங்களிலும் தெளிவாக விளங்கிக்கொண்டிருக்கிற அந்த ஞானஸ்வரூபமே அகண்டானந்த பிரம்மம் எனக் கிரகிக்கப்படுகின்றது.—அந்தப்பிரம்மத்தின் பிரகாசத்தினால் அந்தரேந்திரிய பஹிரேந்திரிய தேகவியாபாரங்கள் உண்டாகின்றன.

𑌤𑌸𑍍𑌯 𑌭𑌾𑌸𑌾 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌵𑌿𑌭𑌾𑌤𑌿 ॥

தஸ்யபாஸா ஸர்வமிதம் விபாதி

“பிரம்மத்தின் பிரகாசத்தினாலேயே இந்தப்பிரபஞ்சமனைத்தும் விளங்குகின்றது” என்பதற்கு மேலே உதகரித்த வேதப்பிரமாணம் இருக்கின்றது.

ஆத்மாவானது ‘நான்’ என்னும் அந்தக்கரணவிருத்தியினால் தெரியப்படுகிறபக்ஷத்தில், அந்த ‘நான்’ என்னும் ஞானமுள்ளவர்களெல்லோரும் முக்தர்களாகக்கூடாதா? எல்லாரும் அப்படி முக்தர்களாகார்கள். எப்படியெனின்,- சூரியன் தானாகப்பிரகாசிக்கக் கூடியவனென்று நாம் விவகரிக்கின்றோமன்றோ? அந்தச்சூரியனை மேகங்கள் மறைக்கும்போது, சூரியன் பிரகாசமுள்ளவனாகவே இருக்கினும், அந்தக்காலத்தில் அவனை மனிதர்கள் காந்தியில்லாதவனாகவே தெரிகிறார்கள். மேகாவரணம் (மேகத்தின்மறைவு) மானிடரின் கண்ணுக்கேயல்லாது சூரியனுக்கு இல்லை. “நான்” என்னும் ஆத்மஞானம் எல்லோருக்கும் பரோக்ஷமாக * த்தெரிந்திருந்தும், அவர்களுக்கு அபரோக்ஷஞானம் உண்டாகும் வரையில்,

* பரோக்ஷம்=கண்ணுக்குத் தெரியாதது, கேட்டறிந்தது. அபரோக்ஷஞானம்=பிரம்மசைதன்னிய தரிசனம்.

அஃதாவது, பிரம்ம ஸாக்ஷாத்காரமானது பிரத்தியக்ஷானுபவத்தினுற் சித்திக்குமளவும், அஞ்ஞானத்தினுலேற்பட்ட மறைவு இருப்பதனுல் மோக்ஷம் கிட்டாது (பிராப்தியாகாது).

𑌤𑌮𑌹𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌵𑍍𑌯𑌾𑌜𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑍇 𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌿 𑌜𑌨𑍍𑌤𑌵𑌃 ।
𑌤𑌥𑌾𑌪𑌿 𑌶𑌿𑌵𑌰𑍂𑌪𑍇𑌣 𑌨 𑌵𑌿𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌿 𑌮𑍋𑌹𑌿𑌤𑌾𑌃 ॥

தமஹம் பிரத்யயவ்யாஜாத் ஸர்வே ஜானந்திஜந்தவ:
ததாபி சிவருபேண ந விஜான்ந்தி மோஹிதா:

"நான், நான் என்னும் பரோக்ஷஞானத்தினுல் ஜனங்களெல்லாரும் ஆத்மாவைத்தெரிந்தவர்களேயாயினும், சுத்தமான ஆனந்தஸ்வரூபமேயாகிய அபரோக்ஷஞானனுபவமானது சாமாணிய ஜனங்களுக்கு உண்டாகாது"

எனச் சூதசங்கிதையிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

தேகேந்திரியாதிகளுக்கு வேருகிப் பிரகாசித்துக்கொண்டிருக்கிற ஸ்வப்பிரகாசமான ஆத்மாவை 'நானே ஆத்மா' என்னும் அபரோக்ஷானுபவத்தினுல் யோகியானவன் எப்பொழுதும் அப்படிப்பட்ட உறுதியான பாவமே கொண்டிருக்கிருன். அந்த திடபாவத்திற்கு (உறுதியான நினைவுக்கு) ஸம்பிரஞ்ஞாத ஸமாதி என்று பெயர்.

𑌤𑌤𑍍𑌰𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑍈𑌕𑌤𑌾𑌨𑌂 𑌧𑍍𑌯𑌾𑌨𑌂 ॥

தத்ரப்ரத்யயைகதானம் த்யாநம்

"மனத்தை ஒரேவிஷயத்தில் நிறுத்துவதே தியானம்"

எனப்படுமென்று பதஞ்சலியோக சூத்திரம் கூறுகின்றது. அந்தத்தியானம் (1) விட்டுவிட்டு உண்டாவது, (2) எப்பொழுதுமிருப்பதுஎன இருவகைப்படும். விட்டுவிட்டு உண்டாவது 'தியானம்' எனவும், எப்பொழுதுமிருப்பது 'ஸமாதி' எனவும் சொல்லப்படும். இந்தத் 'தியானம்' என்பதைப் பற்றியும், 'ஸமாதி' என்பதைப்பற்றியும் வேறு கிரந்தங்களில் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது:—

ஏகாக்கிர (ஒரு முனையான) சித்தவிருத்தியினுல் ஸமேதையமாகின்றது.

𑌤𑌤𑍍𑌸𑌾𑌧𑌨𑌸𑍍𑌯𑌤𑍋𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌯𑌥𑌾𑌰𑍍𑌹𑌮𑍁𑌪𑌦𑌿𑌶𑍍𑌯𑌤𑍇 ।
𑌵𑌿𑌲𑌾𑌪𑍍𑌯 𑌵𑌿𑌕𑍃𑌤𑌿𑌂 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌾𑌂 𑌸𑌂𑌭𑌵 𑌵𑍍𑌯𑌤𑍍𑌯𑌯𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ।
𑌪𑌰𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌂 𑌚 𑌤𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌚𑌿𑌦𑌾𑌨𑌨𑍍𑌦𑌂 𑌵𑌿𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑍇𑌤𑍍 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌕𑌾𑌰 𑌮𑌨𑍋𑌵𑍃𑌤𑍍𑌤𑌿 𑌪𑍍𑌰𑌵𑌾𑌹𑍋𑌽𑌹𑌂𑌕𑍃𑌤𑌿𑌂 𑌵𑌿𑌨𑌾
𑌸𑌂𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌤 𑌸𑌮𑌾𑌧𑌿𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌭𑍍𑌯𑌾𑌸 𑌪𑍍𑌰𑌕𑌰𑍍𑌷𑌤𑌃 ॥

தத்ஸாதனஸ்யதோஜ்ஞானம் யதாரதுபதிச்யதே
விலாப்ய விக்ருதிம் க்ருத்ஸ்னம் ஸம்பவ வ்யத்யயக்ரமாத்
பரிசிஷ்டஞ்ச தந்மாத்ரம் சிதாநந்தம் விசிந்தயேத்
ப்ரஹ்மாகார மனோவ்ருத்தி ப்ரவாஹோஹம் க்ருதிம்விநா
ஸம்ப்ரஜ்ஞாத ஸமாதிஸ்ஸ்யாத்யானப்யாஸ ப்ரகர்ஷத:

"சித்தத்தை ஏகாக்கிரமாக (ஒரே நிலையாக) நிறுத்துகிற யோக்கியதையின் (சக்தியின்) தாரதம்மியத்தையனுசரித்தே சிடனுக்குக் குரு ஞானோபதேசம் செய்கின்றார். யோகாப்பியாசம் செய்கிறகாலத்திற் சித்தத்தை ஏகாக்கிரமாக (ஒரே நிலையாக) இருக்கவொட்டாமற்செய்கிற மனோவிகாரங்களை அடக்கிச் சிதானந்த ரூபத்தைக்குறித்தே யோகாப்பியாஸி பிரயத்தனப்படவேண்டும். அகங்காரமற்று, அஃதாவது, 'நான்' என்னும் அந்தக்கரணவிருத்தியோடு சம்பந்தப்படாமல், தன்னைத்தான் மறந்து கேவல பிரம்மரூபியாவதே 'ஸம்பிரஜ்ஞாதஸமாதி' எனப்படுகின்றது. அப்படிப்பட்ட ஸமாதி தியானுப்பியாஸத்தினால் உண்டாகின்றது."

முதன்முதலில் 'நான்' என்னும் பாவமே பிரம்மமென உபதேசித்தார். பிறகு, 'நான்' என்பது பிரம்மமன்றென்றும், அஃது அந்தக்கரணவிருத்தியென்றும், 'நான்' என்னும் நினைவின் (பாவத்தின்) வடிவமான அந்தக்கரண விருத்தியினாலேயே ஆத்மஞானம் உண்டாகுமென்றும்,—கடைசியாக, பிரம்ம ஸாக்ஷாத்காரமான ஞானத்தையடையவேண்டுமாயின் அந்தக்கரணம் நாசமாகவேண்டுமென்றும் உபதேசித்தார். அந்தக்கரண நாசமாவது, 'நான்' என்னும் பாவத்தை விட்டு தன்னை மறந்து பிரம்மாநுஸந்தானம் செய்யவேண்டுமென்பதாம். இதுவே இப்பொழுது கடைசியாகச் செய்த உபதேசம்.

'யோக.' — 𑌯𑍋𑌗𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌨𑌿𑌰𑍋𑌧𑌃 (யோகச்சித்தவ்ருத்தி நிரோத:) சித்தத்தின் விருத்திகளை (வியாபாரங்களை, நினைவுகளை)

அடக்கிமாய்ப்பதுவே யோகமாகும். அந்தச் சித்தவிருத்திநிரோதமுள்ளவனே யோகியாவன். அந்த யோகமென்பது மௌனம் முதலியவைகளைக் கூடக்குறிக்கின்றது. எப்படியெனின்,—

𑌮𑍌𑌨𑌂 𑌯𑍋𑌗𑌾𑌸𑌨𑌂 𑌯𑍋𑌗𑌃 𑌤𑌿𑌤𑌿𑌕𑍍𑌷𑍈𑌕𑌾𑌨𑍍𑌤𑌶𑍀𑌲𑌤𑌾 ।
𑌨𑌿𑌸𑍍𑌪𑍃𑌹𑌤𑍍𑌵𑌂 𑌸𑌮𑌤𑍍𑌵𑌂 𑌚 𑌸𑌪𑍍𑌤𑍈𑌤𑌾𑌨𑍍𑌯𑍇𑌕𑌦𑌣𑍍𑌡𑌿𑌨𑌃 ॥

மௌனம் யோகாஸனம் யோகஃ திதிக்ஷைகாந்தசீலதா
நிஸ்ப்ருஹத்வம் ஸமத்வஞ்ச ஸ்ப்தைத ஏகதண்டின:

“மௌனந்தரித்திருத்தல், யோகத்திற்குச்சாதனமான ஸித்தாஸனம் முதலிய ஆஸனங்களுடன் கூடியிருத்தல், சித்தவிருத்திகளை நிரோதித்தல், பொறுத்தல், ரகசியஸ்தலவாஸம் (ஏகாந்தமான இடத்தில் வசித்தல்), விருப்பு வெறுப்புக்களில்லாதிருத்தல் (கோரிக்கைகளற்றிருத்தல்), பூதகோடிகளின்...த்து ஸமபாவம் (எல்லாப்பிராணிகளையும் தனக்குச் சமமாகப் பாவித்தல்)—ஆகிய இவ் வேழு லக்ஷணங்களும் சந்நியாசிக்கு இருக்கவேண்டும்.”

அப்படிப்பட்ட யோகத்தினுல் அடையக்கூடிய பயனைச்சொல்லுகின்றார். ‘நிர்வ்ருதமானஸ:’ (சந்தோஷத்துடன் கூடி... மனமுள்ளவன்),—யோகியானவன் பிரம்மானந்த சுகத்தினுல் மிகவும் திருப்தியடைந்த மனமுள்ளவனுகின்றான். பிரம்மஞானிக்கு இதரமான வாக்கு வியாபாரங்களும் மனோவியாபாரங்களுமாகிய விக்கினங்கள் இல்லாததனுல், அவன் எப்பொழுதும் பிரம்மபாவனையிலேயே ஆழ்ந்தினவனுகி ஸ்வப்பிரகாசமான சித்ரூப பிரம்மானந்தத்தை அடைகிறான்.

𑌪𑌰𑌿𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤 𑌵𑌿𑌵𑍇𑌕𑌸𑍍𑌯 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌸𑌂𑌸𑌾𑌰 𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑍇𑌃 ।
𑌚𑍇𑌤𑌸𑌃 𑌤𑍍𑌯𑌜𑌿𑌤𑍋 𑌨𑌪𑍍𑌯𑌾𑌨𑌨𑍍𑌦𑍋 𑌹𑌿 𑌵𑌿𑌵𑌰𑍍𑌧𑌤𑍇 ॥

பரிப்ராப்த விவேகஸ்ய த்யக்தஸம்ஸார ஸம்ஸ்திதே:
சேதஸ: த்யஜிதோ நப் மானந்தோஹி விவர்த்ததே

“ஆத்மானுத்ம விவேகத்துடன் கூடிச் சமுசார நிலைமையை விட்டு மனத்தினுள் உறையுஞ் சங்கற்பங்கள் முதலியன இல்லாமலிருக்கிற யோகிக்குப் பிரம்மானந்தம் கிட்டும்”

என்று மற்றொரு கிரந்தத்திற்சொல்லப்பட்டிருக்கிறது. யோகியானவன் அந்தப் பிரம்மானந்தத்தினுற் சந்தோஷமெய்திய மன

முள்ளவனாக இருக்கின்றமையினாலும், ஜீவப்பிரம்மைக்கியாநு ஸந்தானமுள்ளவனானமையினாலும் அவனே தமக்குக் குருவென ஸ்ரீ சங்கரர் வசனித்தார். இந்தச் சுலோகத்தினால் ஜீவப்பிரம்மைக்கியம் தெளிவாகப் போதிக்கப்பட்டதாகும்.

பீடிகை

உலகத்தில் ஒவ்வொருவருக்கும் இதர வஸ்துக்களினிடத்துள்ள பிரீதியைவிடத் தத்தம் ஆத்மாவினிடத்து, அஃதாவது, தம்மிடத்தில், விசேஷமான பிரீதியிருப்பது இயல்பாக இருக்கின்றது. சுகமில்லாத வஸ்துவினிடத்து எவருக்கும் பிரேமையுண்டாகாது. ஆத்மாவினிடத்துச் சுகமில்லாதிருக்கின் எவரும் அதன்மீது ஆசை வைக்கமாட்டார்கள், எல்லோரும் தத்தம் ஆத்மாவினிடத்து மிகுந்த ஆசை வைத்திருக்கிறார்களென்பது நமது அனுபவத்தில் விளங்குகின்றமையின் ஆத்மா சுகரூபமானது என்பது அனுபவத்தினாலேற்பட்ட விஷயமாகும். பரப்பிரம்மத்தின் ஸ்வரூபம் ஆனந்தமேயாதலின், இந்தப் பிரத்தியகாத்மாவுக்குப் பிரம்மபாவம் உண்டாகின்றதெனச் சொல்ல மேற்கொண்டார்.

𑌯𑌤𑍍𑌸𑍌𑌖𑍍𑌯𑌾𑌂𑌬𑍁𑌧𑌿 𑌲𑍇𑌶𑌲𑍇𑌶𑌤 𑌇𑌮𑍇 𑌶𑌕𑍍𑌰𑌾𑌦𑌯𑍋 𑌨𑌿𑌰𑍍𑌵𑍃𑌤𑍍-
𑌤𑌾𑌃। 𑌯𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑍇 𑌨𑌿𑌤𑌰𑌾𑌂 𑌪𑍍𑌰𑌶𑌾𑌨𑍍𑌤𑌕𑌲𑌨𑍇 𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾 𑌮𑍁𑌨𑌿𑌰𑍍𑌨𑌿𑌰𑍍𑌵𑍃𑌤𑌃।
𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑍁𑌖𑌾𑌂𑌬𑍁𑌧𑍌 𑌗𑌲𑌿𑌤𑌧𑍀𑌰𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌨𑌬𑍍𑌰-
𑌹𑍍𑌮𑌵𑌿𑌤𑍍 । 𑌯𑌃 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌸 𑌸𑍁𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑌨𑍍𑌦𑌿𑌤𑌪𑌦𑍋 𑌨𑍂𑌨𑌂 𑌮𑌨𑍀𑌷𑌾
𑌮𑌮 ॥ ௫ ॥

யத்ஸௌக்யாம்புதி லேசலேசத இமே சக்ராதயோ நிர்வ்ருதா
யச்சித்தே நிதராம் ப்ரசாந்தகலனே லப்த்வா முனிர் நிர்வ்ருதஃ
யஸ்மின் நித்யஸுகாம்புதௌ களிததீர் ப்ரஹ்மைவ நப்ரஹ்மவித்
யஃ கச்சித் ஸ ஸுரேந்திர வந்திதபதோ நூனம் மநீஷா மம

இமே சக்ராதய: = இந்த இந்திரன் முதலான தேவதைகள்

யத்ஸௌக்யாம்புதி லேச லேசத: = பரப்பிரம்மத்தினுடைய அகண்டாகாரமான (அல்லது, வரையற்ற) ஆனந்த சாகரத்துள் அணுமாத்திரமாகிய சுகத்தினால்

நிர்வ்ருதா: = திருப்தியடைகின்றார்கள்

முநி:— மனனசீலன் (நிரந்தரமான பிரம்மத்தை எப்பொழுதும் மனனம் செய்பவனுகி)

நிதராம் ப்ரசாந்த கலனே=சங்கற்பங்களற்ற

சித்தே=மனத்தில்

யத்=பரப்பிரம்மசுகத்தை

லப்த்வா=அடைந்து

நிர்வ்ருத:=திருப்தியுற்றவனுகின்ருன்

யஸ்மின்=எந்த

நித்ய ஸுகாம்புதௌ= நித்திய சுகமென்னும் சமுத்திரத்தில்

களிததீ:=முழுகின மனமுள்ளவன்

ப்ரஹ்மைவ=பிரம்மமேயாவன்

ந ப்ரஹ்மவித் — ப்ரம்மத்தைத் தெரிந்துகொண்டவனல்லன் (ஆனல், தானே பிரம்மமாயினன்)

ய: கச்சித்=அப்படிப்பட்டவன் எவனுயினும்

ஸ:—அவன்

ஸுரேந்த்ரவந்திதபத:=தேவதைகளினுல் நமஸ்கரிக்கப்பெறத்தக்கவன் (என்பது)

நூனம் மநீஷா மம=எனது நிச்சயமான அபிப்பிராயம்

"இந்திரன் முதலான தேவதைகள் பரப்பிரம்மத்தினுடைய அகண்டாகாரமான ஆனந்தக்கடலினின்று ஓரணு அளவு சுகத்தைப் பெற்றுத் திருப்தியடைகிருர்கள். முனியோவெனின், நிரந்தரமான பரப்பிரம்மத்தையே எப்பொழுதும் மனனம் செய்துகொண்டிருக்கிருன்; ஆதலின் அவனுடைய மனத்திற் சங்கற்பங்களே கிடையா; அப்படிப்பட்ட மனத்தில் அவன் பரப்பிரம்ம சுகத்தையடைந்து திருப்தியுறுகிருன். அவ்வாறு நித்தியசுகமெனும் சமுத்திரத்தில் மூழ்கின மனமுள்ள முனியானவன் பரப்பிரம்மமேயாகின்ருன். அவன் பரப்பிரம்மமேயாகின்றதனுல் அவனேப்பிரம்மத்தையறிந்தவனென்பது ஏற்காது (பிரம்மத்தையறிந்தவனென்னும்போது அவன் பரப்பிரம்மத்தினின்று வேருக இருக்கிருனென்று பொருள்படும்). அப்படிப் பரப்பிரம்மமே தானுக விளங்குகின்றவன் எவனுக இருந்தாலும் அவன் தேவதைகளினுல் நமஸ்கரிக்கப்பெறத்தக்கவன்—என்பது எனது நிச்சயமான அபிப்பிராயம்."

இந்திராதிதேவதைகள் பிரம்மசுக லேசத்தை யாசிரயித்துத்திருப்தர்களாகின்றார்கள். சங்கற்பமற்ற சித்தத்தில் பிரம்மசுகத்தைப் பெற்று மனனசீலனாகப்பட்டவன் நித்தியசுக சமுத்திரத்தில் முழுகின மனமுடையவனாகித் தேவதைகளினால் நமஸ்கரிக்கத்தக்கவனாகின்றான்.

'ஸௌக்யம்'.— ஸ்வப்பிரகாசமாகவும் ஞானஸ்வரூபமாகவுமுள்ள ஆத்மாவின் சம்பந்தமான சுகம் எதுவோ அதுவே சௌக்கியம் எனப்படும். 'ஸௌக்யாம்புதி'—ஆனந்தக்கடல். அந்தச் சௌக்கியமானது எங்கும் நிறைந்திருப்பதனால் சமுத்திரத்திற்கு ஒப்பிடப்பட்டது. அந்தப் பெருங்கடலின் ஒரு திவலையைப் பெற்று இந்திராதி தேவதைகள் சுகம்பெற்றுத் திருப்தியடைகின்றார்கள்.

ஏதஸ்யைவாநந்தஸ்ய மாத்ராமுபஜீவந்தி ॥

ஏதஸ்யைவானந்தஸ்ய மாத்ராமுபஜீவந்தி

"அந்தப்பிரம்மானந்த லேசத்தை யடுத்து எல்லாப் பூதங்களும் பிழைக்கின்றன" என்று வேதம் கோஷிக்கின்றது.

'நித்யஸுகாம்புதௌ' — நித்தியஸுகமென்னும் சமுத்திரத்தில்; நித்தியமாகவும் நிரதிசயமாகவுமுள்ள ஆனந்தஸ்வரூபமாக இருக்கிற பிரம்மமே இங்கு 'நித்தியஸுகமென்னும் சமுத்திரம்' எனப்பட்டது.

'கலிததீ:'—முழுகின மனமுள்ளவன். 'கலிதா' என்னும் பதத்திற்கு 'முழுகுவது' என்று அர்த்தமாம். முழுகுவதாவது, எதில் மூழ்குகின்றானோ அந்த பாவத்தை யடைதல். இங்கே, பிரம்மத்தில் மூழ்குகின்றானென்பதனால் பிரம்மபாவமடைகின்றான் என்பது பொருள். இதுவே 'அஸம்பிரஜ்ஞாதஸமாதி' எனப்படும்.

ததேவார்த்தமாத்ரநிர்பாஸம் ஸ்வரூபசூன்யமிவ ஸமாதி: ॥

ததேவார்த்தமாத்ர நிர்ப்பாஸம் ஸ்வரூபசூன்யமிவ ஸமாதி:

"தான் தியானிக்கிறவன் என்னும் ஞானமுண்டாகாமல் பிரம்மவஸ்து மாத்திரமே காணப்பெறும் ஸ்திதியே ஸமாதி எனப்படும்" எனப் பதஞ்சலி சூத்திரம் கூறுகின்றது.

[illegible]

[illegible]

மனஸோவ்ருத்தி சூன்யஸ்ய ப்ரஹ்மாகாரதயாஸ்திதி:
யா உஸம்ப்ரஜ்ஞாத நாமாஸௌ ஸமாதிரபிதீயதே

"விருத்திசூனியமான மனம் பிரம்மாகாரமாக நிற்றலே அஸம்ப்ரஜ்ஞாத ஸமாதியெனப்படும்"

என்றொரு சுலோகம் சொல்லுகின்றது.

இவ்விதமாகப் பரமானந்தத்தில் லீனமானவன் பரிபூர்ணமாகி ப்ரதிசயமாக இருக்கும் ஆனந்தஸ்வரூபி அவனே யாகின்றமையின் அவன் பிரம்மமாகின்றானேயல்லது பிரம்மத்தைத் தனக்கு வேறாக த்தெரிகிறவனாகான். அப்படிப்பட்டவனுக்கும் பிரம்மத்திற்கும் பேதமில்லையாதலின் அவனே பிரம்மமெனப்பட்டான்.

[illegible]

ப்ரஹ்மவித் ப்ரஹ்மைவ பவதி

"பிரம்மத்தைத்தெரிந்தவன் பிரம்மமேயாகின்றான்"

என்று சுருதி சொல்லுகின்றது.

[illegible]

[illegible]

தர்சனாதர்சனே ஹித்வா ஸ்வயம் கேவல ரூபத:
யஸ்திஷ்டதி ஸ து ப்ரஹ்மன் ப்ரஹ்மணப்ரஹ்மவித் ஸ்வயம்

"இவ்வுலகத்து ஆசைகளையும் பரலோகத்து ஆசைகளையும் (ஐஹ காமுஷ்மிகங்களை) விட்டொழித்து எதனிலும் ஒட்டாதவனாகிப் பிரம்மரூபியாக இருப்பவன் பிரம்மமேயாவன்"

என்று ஸ்மிருதிவசன மிருக்கின்றது.

'ஸுரேந்த்ர வந்திதபத:'—ஸுரேந்த்ரன்=இந்திரன். இந்திரன் முதலாயினோர் மேற்சொல்லியபடி பிரம்மமாகவே விளங்குகிறவனுடைய பாதங்களைப் பூஜிக்கிறார்கள். தேவதைகள் பூஜிப்பதன்றி மனிதர்களும் பூஜிக்கிறார்கள்.

[illegible]

தஸ்மாதாத்மஜ்ஞம் ஸ்வர்ச்சயேத்பூதிகாம:

"ஐசுவரியத்தை விரும்புகிற மனிதர்கள் பிரம்மஞானியை நன்ருகப் பூஜிக்கவேண்டும்"

என்று சுருதி சொல்லுகின்றது.

𑌵𑌿𑌚𑌾𑌰𑍇𑌣 𑌪𑌰𑌿𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤 𑌵𑌿𑌵𑍇𑌕𑌸𑍍𑌯𑍋𑌦𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌃।
𑌅𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑍍𑌯𑌾 𑌭𑌵𑌨𑍍𑌤𑍍𑌯𑍇𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌷𑍍𑌣𑍍𑌵𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌶𑌙𑍍𑌕𑌰𑌾𑌃॥

விசாரேண பரிப்ராப்த விவேகஸ்யோதிதாத்மன:
அனுகம்ப்யா பவந்த்யேதே ப்ரஹ்மவிஷ்ணுவேந்த்ரசங்கரா:

"ஆத்மானத்மவிசாரணையினல் பிரம்மஞானமடைந்தவனுக்குத் திரிமூர்த்திகள் முதலாயினேருங்கூட ஸ்வாதீனர்களாகின்ருர்கள்"

என்ருெரு ஸ்மிருதி கூறுகின்றது.

'ஸுரேந்த்ரவந்திதபத:' என்ருல் 'நான்முகப்பிரமன் முதலான தேவதைகளினல் ஸாக்ஷாத்காரம் செய்துகொள்ளப்பட்ட ப்ரம்ம ஸ்தானத்தையடைந்தவன்' என்றும் அர்த்தம் செய்யலாம்.

இந்திரன் பிரம்மநிஷ்டையடைந்து தன்னுடைய ஸ்வானுபவத்தை

𑌪𑍍𑌰𑌾𑌣𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌮𑌾 ॥

ப்ராணேஸ்மிப்ரஜ்ஞாத்மா

"நானே பிராணம், நானே பிரஜ்ஞானம், நானே ஆத்மா"
என்று வெளியிட்டிருப்பதாகச்சுருதிவசனமிருக்கின்றது.

சுருதிகளில் மற்ருேரிடத்தில் நான்முகப்பிரமன் நாரதமாமுனிவரைப்பார்த்துப் 'பரமசாந்தரூபமாகவும், தோஷமற்றதாகவும், இரண்டாவதற்றதாகவும் இருக்கிற ஞானனந்தஸ்வரூபியே நான்; அதுவே பரமபதம்' என்று சொல்லியதாக உதகரிக்கப்பட்டிருக்கின்றது:-

𑌪𑍍𑌰𑌶𑌾𑌨𑍍𑌤𑌮𑌮𑌲𑌮𑌦𑍍𑌵𑌯𑌾𑌨𑌨𑍍𑌦𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌘𑌨 𑌏𑌵𑌾𑌸𑍍𑌮𑌿 𑌤𑌦𑍇𑌵 𑌪𑌰𑌮𑌂 𑌧𑌾𑌮 ॥

ப்ரசாந்தமமலமத்வயானந்த விஜ்ஞானகன ஏவாஸ்மி ததேவ பரமம் தாம:

மற்றும், 'பிரம்மாதிகள், ஸனகாதியோகீந்திரர்கள், சுகஜனகாதிமுனீந்திரர்கள் ஆகிய இவர்கள் பிரம்மாகாரவிருத்தி (பிரம்மவடிவமான மனேவியாபாரம்) இல்லாமல் எப்படி அரை நிமிஷங்கூட

இருக்கமாட்டார்களோ, அப்படியே பிரம்மநிஷ்டர்கள் பிரம்மாகார விருத்தியில்லாமல் ஒருபொழுதும் இரார்கள்':—

𑌨𑌿𑌮𑍇𑌷𑌾𑌰𑍍𑌧𑌂 𑌨 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑌿 𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌮𑌯𑍀𑌂 𑌵𑌿𑌨𑌾 ।
𑌯𑌥𑌾 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑌾𑌸𑍍𑌸𑌨𑌕𑌾𑌦𑍍𑌯𑌾𑌶𑍍𑌶𑍁𑌕𑌾𑌦𑌯𑌃 ॥

நிமேஷார்த்தம் நதிஷ்டந்தி வ்ருத்திம் ப்ரஹ்மமயீம் விநு
யதா திஷ்டந்தி ப்ரஹ்மாத்யாஸ்ஸனகாத்யாச்சுகாதய:

அவ்வாறு பிரம்மாகார விருத்தியிலேயே அமர்ந்திருப்பவன் குருவாவன். அதுவே தமது அபிப்பிராயமென்று ஸ்ரீ பகவத்பாதாசாரியர் சொல்லுகின்றார். இந்த அபிப்பிராயமானது பூஜிக்கத் தக்கது என்பதை யுணர்த்தும்பொருட்டு 'நூனம் மநீஷாமம'என்று 'நூனம்' என்னும் பதத்தை இந்தக் கடைசிச் சுலோகத்திற் சேர்த்துச்சொல்லியிருக்கின்றார். 'நூனம்' என்றதனால், இந்தக்கிரந்தத்திற் போதித்த் விஷயங்களெல்லாம் நிச்சயமானவைகளே என்பது பொருள்.

ஸ்ரீமத்- பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீ ஜகத்குரு
ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் அருளிச்செய்த
மநீஷாபஞ்சகமெனும் தத்வபோத
ஸோபனத்திற்குப் பதஞ்சலி
முனிவாது வியாக்கியா
னத்தையனுசரித்து
திருவையாறு
அ. ஸ்வாமிநாத ஐயர்
எழுதிய தமிழ்ப்பதவுரை பொழிப்புரை
கருத்துரைகள் ஸம்பூர்ணம்

———

சாந்திரஸ்து

97132